ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ.



T01979
R001E04

...ாநுஷ்டாநவிதியென்னும்

திருவாராதநக்ரமமும்

...லக்ராம தத்த்வதீப முக்தாவலியும்.

T
1979

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீமத். பூர்வாசார்ய பரம்பராப்ராப்தமான

ஜீயர் படியைப்பின்சென்ற

நித்யாநுஷ்டாநவிதியென்னும்

திருவாராதநக்ரமமும்

ஸாலக்ராம தத்வதீப முக்தாவலியும்.

சென்னை:

டி. கோபால் நாயகர் & ஸன்.,

கோள்டன் எலெக்ட்ரிக் பிரஸ்ஸிற்

பதிப்பிக்கப்பெற்றது.

28.   [அணா—8.

T001979
Sarasvati Mahal Library. Thanjavur



ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

நித்யாநுஷ்டாநவிதிச் சுருக்கம்.

1. விழித்தல்:—காலையிலெழுந்து அஞ்சலி பண்ணிக்கொண்டு, வாக்யகுருபரம்பரை, த்வயம், சிற்றஞ் சிறுகாலே முதலியவற்றை அநுஸந்திக்கவேண்டும்.

2. ஸௌக்யத்துக்குப்போதல்:—ஸௌக்யமான பின்பு மிருத்திகையால் சௌசம்பண்ணி வாயைக் கொப்பளித்து, தந்ததாவநஞ் செய்து, ஆசமநம் பண்ணவேண்டும்.

3. தீர்த்தமாடுதல்:—'ஆயிரந்தோள்' முதலியவற்றை யநுஸந்தித்து, ஸ்நாநஞ்செய்து, ஸ்ரீமதே ராமாநுஜாய நம: என்று துவட்டிக் கொண்டு. தௌதவஸ்திரம் தரித்து ஆசமநமும் அங்கந்யாஸமுஞ் செய்யவேண்டும்.

4. திருமண்காப்புத் தரித்தல்:—ஸ்ரீமதே ராமாநுஜாய நம: என்று ஸ்தலசுத்தி செய்து, ஓராஸநத்தின்மீது திருமண்பெட்டியை எழுந்தருளப்பண்ணி, ஸ்ரீ பூதேவ்யை நம: என்று திருமண் கதிரை அபிமந்திரித்து, ஸ்ரீசைலேஸ, இத்யாதி தனியன் தொடங்கி, திருப்பல்லாண்டு முதலியவற்றை, திருமண்காப்பும்

ஸ்ரீசூர்ணமுந் தரிசிக்கிறவரையில் அநுஸந்தித்துப், பின்பு திருமணித்தாழ்வட முதலியவற்றை அணிந்துகொண்டு, அஞ்சலிஹஸ்தனுய்க் கேசவாதிநாமங்கள் முதலியவற்றை அநுஸந்திக்கவேண்டும்.

5. காலக்ஷேபஞ்செய்தல்:— ஸ்ரீபகவத்விஷயாதி வியாக்கியாநகிரந்த காலக்ஷேபஞ்செய்து, தீர்த்தவடியைச் சேர்த்து, தீர்த்தம் ஸ்வீகரித்துக்கொண்டு, திருமண்பெட்டியைச் சேர்த்துவிடவேண்டும்.

6. திருக்காப்பு நீக்குதல்:—பெருமாள் ஸந்நிதியில் தெண்டன் ஸமர்ப்பித்து, திருப்பள்ளியெழுச்சி முதலியவற்றை யநுஸந்தித்து, 'நாயகனுய்' என்கிற பாசுரத்தால் கையைத்தட்டித் திருக்காப்பு நீக்கி, திருவாலவட்டம் ஸமர்ப்பித்து, திருப்பள்ளி சோதித்து, 'மாரிமலை, யென்பதனுல்-மந்திராஸாநமும், 'அன்றிவ்வுலகம்' 'அன்றிவ்வுலகம்' என்பதனுல் - மங்களாசாஸநமுஞ் செய்து, வாக்ய குருபரம்பரை முதலியவற்றை யநுஸந்திக்கவேண்டும்.

7. வட்டில்களில் தீர்த்தஞ்சேர்த்தல்:—செம்பு தீர்த்தத்தில் திருத்துழாய் முதலியவைகளைச் சேர்த்து, செம்பை * வலதுகையினுல் மூடிக்கொண்டு. ஐந்துதரம் உத்தரவாக்யத்தால் அபிமந்திரித்து, அந்தத் தீர்த்தத்தால் ஐந்து வட்டில்களையும் பூரித்துத் திருத்துழாய் சேர்த்து அபிமந்திரித்துப் புரோக்ஷிக்கவும்.

8. ஸ்வாசார்யனுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்தல்:—ஆசார்யனுக்குத் தனியே இரண்டு வட்டில்களில் தீர்த்தம்பூரித்து, 'அஸ்மத் குருப்யோநம:' என்று-அர்க்யபாத்யாசமநமும், 'வெண்ணெயளைந்த, என்கிற பாசுரங்களினுல் - திருமஞ்சனமும், 'வகையால்' என்கிற பாசுரத்தால்-தூபமும், கேசவாதிநாமங்களால்-திருமண்காப்பும், 'பூசுஞ்சாந்து' என்கிற பாசுரத்தால்-சாத்துப்படி முதலியனவும், 'பரிவதில் லீசனை' யென்பதனுல்-தூபமும், 'வையந்தகளியா' என்பதனுல் - தீபமும், 'பல்லாண்டு' என்கிற பாசுரத்தால் - கர்ப்பூரமும், அர்க்யபாத்யாசமநமும், சென்றுற் குடையாம்' என்கிற பாசுரத்தால்-மந்த்ரபுஷ்பமும், ஸமர்ப்பிக்கவேண்டும்.

---

* வலதுகையால் மூடினுலும் இடதுகையும் அதற்கு ஸஹாயமாயிருக்கிற பாவனையாய் வலதுகையைத் தொட்டுக்கொண்டே இருக்கவேண்டும். இப்படியே மேலுமுணர்க.

9. ஆழ்வாராசார்யர்களுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்தல்:—ஆசார்யனுக்கு விநியோகித்த இரண்டு வட்டில்களையுஞ் சோதித்து, வேறே தீர்த்தம் பூரித்து, பராங்குசபரகால யதிவராதிப்யோநம: என்று அநுஸந்தித்து ஆசார்யன் ஸ்ரீ ஹஸ்தத்தால் திருவாராதநம் ஸமர்ப்பிக்கிறதாகப் பாவித்து, மேற்குறித்தபடி செய்யவேண்டும்.

10. பெருமாள், பிராட்டியார் முதலியவர்களுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்தல்:—வட்டில்கள் ஐந்திலும் பூரித்து வைத்திருக்குந் தீர்த்தத்தினால்-ஸர்வமங்கல விக்ரஹாய ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாயநம: என்று மேற்குறித்தபடியே ஸமர்ப்பிக்க வேண்டும்.

11. திவ்யப்ரபந்தம் ஸேவித்தல்:— 'குருமுகம்' என்னுந் தனியன் தொடங்கி, "திருப்பல்லாண்டு' முதலியவைகளைச் சேவிக்கவேண்டும்.

12. பிரஸாதங் கண்டருளப் பண்ணுதல்:— 'ஸர்வமங்கல விக்ரஹாய' முதலிய வாக்யங்களால் போஜ்யாஸநத்தி லெழுந்தருளச்செய்து, அர்க்யபாத்யாசமநம் ஸமர்ப்பித்து, உத்தரவாக்யத்தால் ஸ்தலசுத்தி செய்து, தளிகையைத் தீர்த்தத்தினால் புரோக்ஷித்து, 'நாறு நறும்பொழில்,' 'இன்று வந்தித்தனை,' 'கூடாரை' என்கிற பாசுரங்களையும் - ஸர்வமங்கல விக்ரஹாய ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம: என்னும் மந்திரத்தையு மநுஸந்தித்து, பெருமாள் முதலானவர்க்கும், பராங்குசபரகால யதிவராதிப்யோ நம: என்று-நம்மாழ்வார் முதலிய பூர்வாசார்யர்களுக்கும், அஸ்மத்குருப்யோ நம: என்று-ஸ்வாசார்யனுக்கும்-அமுதுந் தீர்த்தமுங் கண்டருளவித்து, பின்பு அர்க்யபாத்யாசமநம் ஸமர்ப்பிக்கவேண்டும்.

13. அடைக்காயமுது செய்வித்தல்:—பர்யங்காஸநத்தி லெழுந்தருளப்பண்ணி, அர்க்யாதிகள் ஸமர்ப்பித்து, 'போய்ப் பாடுடைய' என்கிற பாசுரத்தால் மேற்கண்டபடி அடைக்காயமுது செய்வித்து, அர்க்யாதியும் கர்ப்பூரமும் ஸமர்ப்பிக்கவும்.

14. சாற்றுச்செய்தல்:—சிற்றம், வங்கம், இருப்பிடம், இன்புற்ற, அங்கயல், பூமன்னு, பல்லாண்டு, அடியோமோடும், ஸர்வதேச முதலியவும் வாழித்திருநாமங்களும் ஸேவிக்கவும்.

15. திருக்காப்புச் சேர்த்தல்:— சய்யாஸநத்திலெழுந்தருளச்செய்து, 'உபசாராபதேஸேந' என்கிற ஸ்லோகத்தை யநுஸந்தித்துத் திருக்காப்பு சேர்த்து தெண்டன் ஸமர்ப்பிக்கவும்.

16. பிரஸாதம் ஸ்வீகரித்தல்:—பெருமாள் முதலியவர்களுக்குக் கண்டருளப்பண்ணின சேஷத்தை ஆசார்யன் தனியனை அநுஸந்தித்து ஸ்வீகரிக்கவேண்டும்.

17. காலக்ஷேபஞ்செய்தல்:— பகவத்விஷய அஷ்டாதசரஹஸ்யாதி வியாக்கியாந காலக்ஷேபஞ் செய்யவும்.

18. இராத்திரியில் பிரஸாதங் கண்டருளச் செய்தல்:— இராத்திரியில் பரிசுத்தனுய்க் கையைத்தட்டிப் பெருமாள் ஸந்நிதி திருக்காப்பு நீக்கிப் புதிய தீர்த்தத்தினல் வட்டில்களைப் பூரித்து, முன்சொன்னபடியே அர்க்யாதி ஸமர்ப்பித்து, ஸ்ரீ சைலேச தனியன் தொடங்கி-திருப்பல்லாண்டு, ஆனிரை, இந்திரன், சென்னி, அமலனுதி, கன்னிநுண் சிறுத்தாம்பு, ஏழையேதலன், ஆழியெழச்சங்கும் இவைகளை ஸேவித்து, மேற்கண்டபடி பிரஸாத முதலியவற்றைக் கண்டருளச்செய்து, தச்சேஷ பிரஸாதத்தை ஸ்வீகரித்து, வாக்கிய குருபரம்பரையையும், த்வயத்தையும் அநுசந்தித்து பாகவதாசார்யர்களை பாவநா ப்ரகர்ஷத்தாலே ஸேவித்துக்கொண்டே சயநித்து, மறுபடியும் விழித்துக்கொள்ளும்போது ஷை குருபரம்பரையையும் த்வயத்தையுமநுஸந்திக்கவேண்டும்.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

நித்யாநுஷ்டாநவிதி.

1. நித்திரையிலிருந்து விழித்தல்.

நித்யமாய்க் காலையி லெழுந்திருக்கும்பொழுது படுக்கையிற் றானே கைகூப்பிக்கொண்டு, வாக்யகுருபரம்பரையையும். த்வயத்தையும் அநுஸந்தித்து, ஸ்வாசார்யன்முதல் ஆழ்வாராசார்யர்களையும், பெரியபிராட்டியார், பரமபதநாதன், கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் முதலான நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான்களையுந் தியாநித்து, (1-ஸ்ரீசைலேச இத்தியாதி) தனியன் முதல்(2-திருப்பள்ளி யெழிச்சியும்,3-திருப்பாவை - முழுதும்) தனியன்களுடன் அநுஸந்திக்கவேண்டும். அதற்கு ஸமயமில்லாத பக்ஷத்தில், முதற்பாசுரம், (4 - சிற்றஞ்சிறுகாலே, 5-வங்கக்கடல்) இந்தமூன்று பாசுரங்களாகிலும் அநுஸந்திக்கவேண்டும்.

எழுந்தபின்பு (6 - குஷ்யதே) என்னும் ஸ்லோகத்தை அநுஸந்தித்து ஸ்ரீரங்கயாத்திரை செய்கிறதாகப் பாவித்து, பத்தெட்டடி - கோயில் முகமாய் நோக்கி நடக்கவேண்டும்.

2. ஸௌக்கியத்துக்குப் போதல்.

ஸௌக்யத்துக்குப் போகையில், கையைத்தட்டிக்கொண்டு காலையில் - வடக்குமுகமாயும், மாலையில் - தெற்குமுகமாயுமிருந்து ஸௌக்யமானபின்பு; குதசௌசமும், பதசௌசமும் பண்ணி-32, 16, 8, அல்லது 6-தரமாகிலும் மிருத்திகையால் கரசௌசஞ் செய்துகொண்டு வேறேதீர்த்தத்தால் பதினாறுதரம் வாயைக்கொப்பளித்து, ஆலம்விழுது, வேல், பூலா, நாயுருவி அல்லதுமாவிலை இவைகளிலொன்றைச் சோதித்து, கிழக்கு அல்லது மேற்குமுகமாக ஒரிடத்திலிருந்து தந்ததாவநஞ்செய்து, வாயை நன்றாய்க் கொப்பளித்துக் காலலம்பி உட்கார்ந்துகொண்டு, உளுந்தெடை தீர்த்தத்தால் அஸ்மத் குருப்யோநம:, அஸ்மத் பரமகுருப்யோநம:, அஸ்மத்ஸர்வகுருப்யோநம: என்றுவது, அச்யுதாயநம:, அநந்தாயநம:. கோவிந்தாயநம: என்றுவது உச்சரித்து, மூன்றுதரம் ஆசமநம் பண்ணவேண்டும்.

3. தீர்த்தமாடுதல்.

தான் ஸ்நாநஞ் செய்வதற்குமுன்பு தீர்த்தத்தை இரண்டு ஹஸ்தங்களாலுமெடுத்து (7 - ஆயிரந்தோள், 8 - இலைத்தலை, 9- திஸ்ர: கோட்ய:) என்னுமவைகளை அநுஸந்தித்துப் பெரியபெருமாள், பெரியபிராட்டியார், சேனைமுதலியார், நம்மாழ்வார், ஸ்ரீமந்நாதமுநிகள், உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஸ்ரீ ஆளவந்தார், பெரியநம்பி உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாளமாமுநிகள் முதலான ஸ்ரீபகவத்பாகவத அஸ்மதாசார்யர்களுடைய ஸ்ரீபாததீர்த்தமென்று அபிமந்திரித்து, சிரஸில் புரோக்ஷித்துக்கொண்டே, ஸ்ரீபகவத்பாகவத ஸம்ஸ்லேஷாதிகளுக் குறுப்பாகச் சரீரத்தை யலம்புகிறேனென்று ஸ்நாநஞ் செய்யவேண்டும்.

பின்பு வேண்டியமட்டில் எம்பெருமானார் திருவடிகளேசரணமென்றுவது, (10-அநிஸம்பஜதாம்) என்கிற ஐந்துஸ்லோகங்களையும் அநுஸந்தித்துக்கொண்டாவது, தௌதவஸ்திரத்தால் துவட்டி, தௌதமான பரிவட்டம் தரித்துக் காலலம்பி உட்கார்ந்து, முன்போலவே மூன்றுதரம் ஆசமநம் பண்ணி, அடியில் கண்டிருக்கிறபடி:—

கேசவாயநம: - என்று - பெருவிரலினால் - வலதுதாடையிலும்
நாராயணாயநம: ,, அப்படியே - இடதுதாடையிலும்
மாதவாயநம: ,, பவித்திரவிரலினால்-வலது கண்ணிலும்
கோவிந்தாயநம: ,, அப்படியே - இடதுகண்ணிலும்
விஷ்ணவேநம, ,, ஆள்காட்டிவிரலினால் - வலதுமூக்கிலும்
மதுஸூதநாயநம: ,, அப்படியே - இடதுமூக்கிலும்
த்ரிவிக்ரமாயநம: ,, சுண்டுவிரலினால் - வலதுகாதிலும்
வாமநாயநம: ,, அப்படியே - இடதுகாதிலும்
ஸ்ரீதராயநம: ,, நடுவிரலினால் - வலதுபுயத்திலும்
ஹ்ருஷீகேசாயநம: அப்படியே - இடதுபுயத்திலும்
பத்மநாபாயநம: ,, நான்குவிரல்களாலும் - நாபியிலும்
தாமோதராயநம: ,, ஐந்து விரல்களாலும்-சிரஸ்ஸிலும் அங்கந்யாஸ கரந்யாஸங்கள் செய்யவேண்டும்.

---

4. திருமண் காப்பணிதல்.

ஸ்ரீமதேநாராயணாயநம: என்கிற உத்தரவாக்யத்தை அநுஸந்தித்து ஓரிடத்தில் கொஞ்சம் தீர்த்தத்தைப் புரோக்ஷித்து, ஒருயர்ந்த ஆஸநத்தின்மீது திருமண்பெட்டியை எழுந்தருளச் செய்து, கிழக்கு முகமாய்த் தான் தர்ப்பாஸநம் அல்லது மணையின்மீதாவது இருந்து கொண்டு, கையைத்தட்டித் திருமண் பெட்டியை அவிழ்த்துத் திருமண்காப்பைக் கையில் வைத்து மூடிக்கொண்டு ஸ்ரீ பூதேவ்யைநம: என்று அபிமந்திரித்து, கோகர்ணத்துத் தீர்த்தத்தை வலக்கையாலெடுத்து இடக்கையில் விட்டு திருமண் சேர்த்துக்கொண்டே, ஸ்ரீ சைலேசேத்யாதி தனியனைத்தொடங்கி, (11-திருப்பல்லாண்டு) (12-கண்ணிநுண் சிறுத்தாம்பு; திருப்பாவை (13—இராமாநுச நூற்றந்தாதி) இவைகளைக் காலோசிதமாகத் திருமண் ஸ்ரீசூர்ணமணிகிற வரையில் — பூர்த்தியாயாகிலும்: சுருக்கமாய் - முதற்பாசுரம் சாற்றுப் பாசுரமாகிலும் அநுஸந்திக்கவேண்டும்.

திருமண்காப்பு தரிக்கும்போது.

1 - கேசவாயநம: - என்று - நெற்றியிலும்
2 - நாராயணாயநம: ,, நாபியிலும்
3 - மாதவாயநம: ,, மார்பிலும்
4 - கோவிந்தாயநம: ,, நெஞ்சிலும்
5 - விஷ்ணவேநம: ,, வலவயிற்றிலும்
6 - மதுஸூதநாயநம: ,, வலப்புயத்திலும்
7 - த்ரிவிக்ரமாயநம: ,, வலத்தோளிலும்
8 - வாமநாயநம: ,, இடவயிற்றிலும்
9 - ஸ்ரீதராயநம: ,, இடத்தோளிலும்
10 - ஹ்ருஷீகேசாயநம: இடத்தோளிலும்
11 - பத்மநாபாயநம: ,, அடிமுதுகிலும்
12 - தாமோதராயநம: ,, பிடரியிலும்

அநுஸந்தித்துக்கொண்டே தரிக்கவேண்டும். பின்பு ஸ்ரீசூர்ணஞ் சேர்த்துக்கொள்ளும்போது:—

1 - ஸ்ரீதேவ்யைநம: என்று - நெற்றியிலும்
2 - அம்ருதோத்பவாயைநம: ,, நாபியிலும்
3 - கமலாயைநம: ,, மார்பிலும்
4 - சந்த்ரசோதிந்யைநம: ,, நெஞ்சிலும்
5 - விஷ்ணுபத்ந்யைநம: ,, வலவயிற்றிலும்
6 - வைஷ்ணவ்யைநம: ,, வலப்புயத்திலும்
7 - வராரோஹாயைநம: ,, வலத்தோளிலும்
8 - ஹரிவல்லபாயைநம: ,, இடவயிற்றிலும்
9 - சார்ங்கிண்யைநம: ,, இடப்புயத்திலும்
10 - ஸ்ரீதேவதேவ்யைநம: ,, இடத்தோளிலும்
11 - ஸ்ரீமஹாலக்ஷ்ம்யைநம: ,, அடிமுதுகிலும்
12 - லோகஸுந்தர்யைநம: ,, பிடரியிலும்

அநுஸந்திக்கவேண்டும். இப்படி த்வாதஸ ஊர்த்வபுண்டரங்கள் தரிக்கவும்; அதற்கு அவகாசமில்லாவிடில், ஆதியுமந்தமுமாகிய நெற்றியிலும் பிடரியிலுமாவது தரித்தபின்பு, கையைச் சோதிக்காமல் நின்ற சேஷத்தைப் பூமியிற்சிந்தாமல் இரண்டு கைகளையுஞ் சேர்த்துச் சிரஸில் தடவிக்கொள்ளவேண்டும்.

நூற்றெட்டுத் திருப்பதிகளென்கிற பாவனையாகிய நூற்றெட்டுத் திருத்துழாய் மணிகளுள்ள மாலையும் எழுபத்துநான்கு ஸிம்மாஸநாதிபதிகள் பாவனையாகிய எழுபத்துநான்கு தாமரை மணிகளுள்ள நலிநாக்ஷமாலையும், திருப்பவித்ர மாலையும் கழுத்தி லணிந்துகொண்டு, தன்னுசார்யன் திருவடிநிலையைச் சிரஸில் வைத்துக்கொண்டு, அஞ்சலி ஹஸ்தனாய்:—

1 - நெற்றியில் - கேசவாயநம: - என்றும்
2 - வயிற்றில் - நாராயணாயநம: - என்றும்
3 - மார்பில் - மாதவாயநம: - என்றும்
4 - நெஞ்சில் - கோவிந்தாயநம: - என்றும்
5 - வலவயிற்றில் - விஷ்ணவேநம: - என்றும்
6 - வலப்புயத்தில் - மதுஸூதநாயநம: - என்றும்
7 - வலத்தோளில் - த்ரிவிக்ரமாயநம: - என்றும்
8 - இடவயிற்றில் - வாமநாயநம - என்றும்
9 - இடப்புயத்தில் - ஸ்ரீதராயநம: - என்றும்
10 - இடத்தோளில் - ஹ்ருஷீகேசாயநம: - என்றும்
11 - அடிமுதுகில் பத்மநாபாயநம: - என்றும்
12 - பிடரியில் - தாமோதராயநம: - என்றும்

நெற்றியில்:—𑌲𑌲𑌾𑌟𑍇 𑌸𑌤𑌤𑌂 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌹𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌚𑌤𑍁𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌂 𑌨𑌮𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌕𑍇𑌶𑌵𑌂 𑌕𑌨𑌕𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ॥

லலாடேஸததந் தேவ்யா ஶ்ரியா ஸஹவிராஜிதம்
சதுஶ்சக்ரந்நமஸ்யாமி கேஶவங் கநகப்ரபம். 1

வயிற்றில்:—𑌅𑌮𑍃𑌤𑍋𑌦𑍍𑌭𑌵𑌯𑌾 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌮𑌥𑍋𑌦𑌰𑍇 ।
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌘𑌨𑌶𑍍𑌯𑌾𑌮𑌂 𑌚𑌤𑍁𑌶𑍍𑌶𑌙𑍍𑌖𑌂 𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

அம்ருதோத்பவயா தேவ்யா ஸமாஶ்லிஷ்டமதோதரே
நாராயணங் கநஶ்யாமஞ் சதுஶ்ஶங்க்கங் நமாம்யஹம். 2

மார்பில்:—𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌕𑌮𑌲𑌯𑌾𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌂 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌹𑌂 𑌦𑌯𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌮𑍍 ।
𑌮𑌾𑌧𑌵𑌂 𑌮𑌣𑌿𑌭𑌙𑍍𑌗𑌾𑌭𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌗𑌤𑌮𑍍 ॥

நித்யங் கமலயாஶ்லிஷ்டம் ஹ்ருதயே ஹந் தயாம்புதிம்
மாதவம் மணிபங்காபஞ் சிந்தயாமிசதுர்கதம்.

நெஞ்சில்:—𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍋𑌭𑌿𑌨𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑌂𑌕𑌣𑍍𑌠𑍇 𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌭𑌾𑌸𑌂 𑌸𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌂𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌂 𑌮𑌹𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

தேவ்யாச சந்த்ரஶோபிந்யாதேவங் கண்ட்டேவிராஜிதம்
சந்த்ரபாஸஞ் சஶ்ஶார்ங்கங் கோவிந்த மஹமாஶ்ரயே. 4

வலப்புறவயிற்றில்:— 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌯𑌾 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌕𑍍𑌷𑍌𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌗𑌂। 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌲𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌦𑍍𑌮𑌕𑌿𑌞𑍍𑌜𑌲𑍍𑌕𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌂 ॥

விஷ்ணுபத்ந்யாக்க்யயாதேவ்யா குக்ஷௌ தக்ஷிணபார்ஶ்வகம்
விஷ்ணுஞ்சதுர்ஹலம் வந்தே பத்மகிஞ்ஜல்கஸந்நிபம். 5

வலப்புயத்தில்:—𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀 𑌸𑌂𑌜𑍍𑌞𑌯𑌾 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌕𑌲𑌿𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌭𑍁𑌜𑍇। 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌸𑌲𑌮𑌬𑍍𑌜𑌾𑌭𑌂 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑍇𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨𑌮𑍍॥

வைஷ்ணவீஸம் ஜ்ஞயா தேவ்யா கலிதந் தக்ஷிணேபுஜே
சதுர்முஸலமப்ஜாபம் ஸம்ஶ்ரயே மதுஸூதநம். 6

வலத்தோளில்:— 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂𑌸𑍇 𑌦𑌯𑌾𑌵𑌾𑌰𑍍𑌧𑌿𑌂 𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑌾𑌧𑌿𑌪𑌂𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 ॥ 𑌅𑌗𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚𑌤𑍁𑌃𑌖𑌡𑍍𑌗𑌂 𑌭𑌾𑌵𑌯𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥

தக்ஷிணாம்ஸே தயாவார்த்திம் வராரோஹாதிபம் ப்ரபும்
அக்நிவர்ணஞ்சது: கட்கம் பாவயாமித்ரிவிக்ரமம். 7

இடவயிற்றில்:— 𑌹𑌰𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑍁𑌤𑌂 𑌕𑍁𑌕𑍍𑌷𑍌 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌕𑌮𑍍। 𑌵𑌾𑌮𑌨𑌂𑌬𑌾𑌲𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌭𑌂𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌜𑍍𑌰𑌂𑌵𑌿𑌭𑌾𑌵𑌯𑍇॥

ஹரிப்ரியாயுதங் குக்ஷௌவாம பார்ஶ்வஸ்த்த புண்ட்ரகம்
வாமநம்பால ஸூர்யாபஞ் சதுர்வஜ்ரம் விபாவயே. 8

இடப்புயத்தில்:— 𑌵𑌾𑌮𑌬𑌾𑌹𑍌 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌿𑌣𑍀𑌪𑌤𑌿𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍। 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌭𑌂𑌚𑌤𑍁𑌃 𑌪𑌟𑍍𑌟𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

வாமபாஹௌ மஹாபாஹும் ஶார்ங்கிணீ பதிமவ்யயம்
ஶ்ரீதரம் புண்டரீகாபஞ் சது: பட்ட ஸமாஶ்ரயே. 9

இடந்தோளில்:— 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌯𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌶𑍍𑌰𑌿𑌤𑌂𑌵𑌾𑌮𑌾𑌂𑌸𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍। 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌦𑍍𑌗𑌰𑌮𑌭𑍍𑌯𑍇𑌮𑌿𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌂 𑌤𑌡𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌮𑍍॥

தேவதேவ்யாக்க்யயா தேவ்யா ஶ்ரிதம்வாமாம்ஸஸம்ஶ்ரிதம்
சதுர்முத் கரமப்யேமி ஹ்ருஷீ கேஶந் தடித்ப்ரபம். 10

அடிமுதுகில்:— 𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌸𑌂𑌹𑍃𑌷𑍍𑌟𑌯𑌾 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾
𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍 । 𑌪𑌞𑍍𑌚𑌾𑌯𑍁𑌧𑌂 𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑍍𑌯𑌰𑍍𑌕𑌰𑍋𑌚𑌿𑌷𑌮𑍍 ॥

ப்ருஷ்ட்டே ஸ௦ஹ்ருஷ்டயா தேவ்யா மஹாலக்ஷ்ம்யா விராஜிதம்
பஞ்சாயுதம் பத்மநாபம் ப்ரணமாம்யர்க்கரோசிஷம். 11

பிடரியில்:— 𑌕𑌕𑍁𑌦𑍍𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑌦𑌾𑌲𑍋𑌕𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌪𑌤𑌿𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ।
𑌦𑌾𑌮𑍋𑌦𑌰𑌂 𑌚𑌤𑍁𑌃𑌪𑌾𑌶𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌗𑍋𑌪𑌨𑌿𑌭𑌂 𑌭𑌜𑍇 ॥

ககுத்மந்த௦ ஸதாலோக ஸுந்தரீபதி மத்புதம்
தாமோதரஞ் சது:பாஶமிந்த்ரகோப நிபம்பஜே. 12

1. லலாடே - நெற்றியில்,—ஸததம்-ஸர்வகாலமும்,— ஶ்ரீயா தேவ்யா - லக்ஷ்மீதேவியோடு,—ஸஹ - கூட,—விராஜிதம்-ப்ரகாசிக்கின்றவரும்,—சதுஸ்சக்ரம் - நான்கு சக்ரங்களணிந்தவரும், கநகப்ரபம் - ஸ்வர்ணம்போன்ற காந்தியுடையவருமான,—கேஶவம் - கேசவனென்னும் பேரையுடைத்தான பெருமாளை,—நமஸ்யாமி – ஸேவிக்கிறேன்.

2. அம்ருதோத்பவயா - அம்ருதோத்பவையென்று பேரையுடைத்தாயிருக்கிற, - தேவ்யா-பார்யையாலே,— ஸமாஶ்லிஷ்டம்-ஆலிங்கநம் பண்ணப்பட்டவரும்,—சதுஶ்ஶங்க்கம் - நான்கு சங்கங்களை யுடையவருமான,—நாராயணம் - நாராயண னென்னும் பெருமாளை,—அஹம் - நான்,—உதரே - வயிற்றின்கண், நமாமி-ஸேவிக்கிறேன்.

3. ஹ்ருதயே - மார்பிலே,—நித்யம் - எப்பொழுதும்,—கமலயா - கமலாதேவியோடே,—ஶ்லிஷ்டம் - கூடிக்கொண்டு,—தாயம்புதிம் - தயைக்கு ஸமுத்திரம்போலே முக்யஸ்தாநமாய்,—மணிபங்காபம் - இந்த்ர நீலமணிபோன்ற காந்தியை உடையவராய்,— சதுர்க்கதம் - நான்கு கதைகளை யுடைத்தா யிருக்கிற,—மாதவம் - மாதவனென்கிற பெருமாளை, — அஹம் - நான்,— சிந்தயாமி - தியாநிக்கிறேன்.

4. கண்ட்டே - கழுத்தின்கண்;—சந்த்ரஶோபிந்யா தேவ்யா-சந்திர சோபிநீயென்கிற தேவியோடே,—விராஜிதம் - விளங்கா நின்று கொண்டு,—சந்த்ரபாஸம் - சந்திரன்போன்ற காந்தியுடையராய்,—சதுஃ சார்ங்கம் - நான்கு தநுஸ்ஸுக்களையு முடைத்தாயிருக்கிற,—கோவிந்தந் தேவம் - கோவிந்தனென்கிற பெருமாளை,—அஹம்—நான்,—ஆஶ்ரயே – ஆஶ்ரயிக்கிறேன்.

5. குக்ஷௌதக்ஷிணபார்ஶ்வகம்-வலப்புற வயிற்றை அடைந்து,—விஷ்ணு பத்ந்யாக்க்யயா - விஷ்ணு பத்நியென்று திருநாமமுடைய,—தேவ்யா - பார்வையோடே கூடினவராய்,-சதுர்ஹலம்-நான்கு கலப்பைகளைத் தரித்துக்கொண்டு,—பத்மகிஞ்ஜல்கஸந்நிபம் - தாமரஸபுஷ்பத்தின் தாதோடு ஸமாநாநாயிருக்கிற,—விஷ்ணும்—விஷ்ணும் - விஷ்ணுவென்கிற பெருமாளை,—வந்தே-ஷேவிக்கிறேன்.

6. தக்ஷிணே புஜே - வலப்புயத்தின்கண்,-வைஷ்ணவீஸஂஜ்ஞயா தேவ்யா-வைஷ்ணவியென்று பேரையுடைய தேவியோடே,-கலிதம் - கூடிக்கொண்டு,—சதுர்முஸலம் - நான்கு உலக்கைகளையுடையராய்,— அப்ஜாபம் - தாமரைப்பூப்போன்ற காந்தியுடையரா யிருக்கிர,—மதுஸூதநம் - மதுசூதநனென்கிற பெருமாளை,-ஸஂஶ்ரயே - ஆஶ்ரயிக்கிறேன்.

7. தக்ஷிணாஂஸே - வலத்தோளினிடத்தே,—தயாவார்த்திம்-கிருபைக்கு ஸமுத்ரமாய்,— வராரோஹாதிபம் - வராரோஹை என்கிற தேவியோடே கூடிக்கொண்டு,—ப்ரபும் - (ஆஶ்ரித சம்ரக்ஷணத்திலே) ஸமர்த்தராய்,— அக்நிவர்ணம் - அக்கிநியைப் போன்ற காந்தியோடுகூடி,— சதுஃகட்கம் - நான்கு கத்திகளையுடைத்தாயிருக்கிற,— த்ரிவிக்ரமம் - த்ரிவிக்ரமனென்கிற பெருமாளை,—பாவயாமி - த்யாநம் பண்ணுகிறேன்.

8. குக்ஷௌவாமபார்ஶ்வஸ்த்தபுண்ட்ரகம் - இளப்புறவயிற்றிலிராநின்ற திருமண்காப்பை யடைந்து,— பாலஸூர்யாபம் - பாலசூரியன் போன்ற காந்தியையுடையராய்,— சதுர்வஜ்ரம் - நான்கு வஜ்ராயுதங்களையும் உடைத்தானவராய்,—ஹரிப்ரியாயுதம் - ஹரிப்ரியை யென்கிற தேவியோடு கூடியிருக்கிற,-வாமநம் - வாமநனென்கிற பெருமாளை,— விபாவயே - தியாநிக்கிறேன்.

9. வாமபாஹௌ - இடப்புயத்தின்கண்,—மஹாபாஹும் — பெரிய குதித்தோள்களை யுடையவரும்,—சார்ங்கினம் - சார்ங்கமென்கிற தநுஸ்ஸை யுடையவரும்,— அவ்யம்பதிகம் - நசஶ்ரஹிதராய் அதிபதியா யிருக்குமவரும்,— புண்டரீகாபம் - தாமரஸபுஷ்பம்போன்ற காந்தியை யுடைத்தானவரும்,—ஸ்ரீதரம் - ஸ்ரீதரனென்கிற பெருமாளை,—ஆஶ்ரயே - ஆஶ்ரயிக்கிறேன்.

10. தேவதேவ்யாக்க்யாதேவ்யா,-தேவதேவியென்கிறதேவி யினாலே,—ஶ்ரிதம் - ஆஶ்ரயிக்கப் பட்டிருக்கிறவரும்,—வாமாംஸ ஸംஶ்ரிதம்-இடத்தோளை ஆஶ்ரயித்திருக்கிறவரும்,— சதுர்முத் கரம்—நான்கு உழல் தடிகளை யுடைத்தாயிருக்கிறவரும்,—தடித் ப்ரபம் - மின்னல் போன்ற காந்தியை யுடைத்தாயிருக்கிறவரு மான,—ஹ்ருஷீகேஶம் - ஹ்ருஷிகேசனென்கிற பெருமாளை,—அப் யேமி - அடைகிறேன்.

11. ப்ருஷ்ட்டே - இடுப்புக்குமேல்-பின்முதுகில்,—ஸംஹ்ருஷ் டயா - ஸந்தோஷ மடைந்திருக்கிற;—மஹாலக்ஷ்ம்யா தேவ்யா- மஹாலக்ஷ்மியென்கிற தேவியோடே,— விராஜிதம்—பிரகாசியா நின்றவரும்,— பஞ்சாயுதம் - ஐந்து ஆயுதங்களுடையவரும்,— அர்க்கரோசிஷம் - ஸூரியன்போன்ற காந்தியை யுடையவரு மான,—பத்மநாபம்-பத்மநாபனென்கிற பெருமாளை, ப்ரணமாமி- ஸேவிக்கிறேன்.

12. கருத்மந்தம் - பிடரியை யுடைத்தாயிருக்கிற (அதா வது பிடரியை யடைந்திருக்கிற) லோகஸுந்தரீபதிம் - லோக சுந்தரியென்கிற தேவிக்கு அதிபதியாய்;— அத்புதம் - அப்படி ப்ரஸித்தராய்,—சதுஃபாஶம் - நான்கு பாசங்களை யுடையவரும்,— இந்த்ரகோபநிபம் பட்டுப் பூச்சிபோன்ற பிரகாசத்தை யுடைய வருமான,-தாமோதரம் தாமோதரனென்கிற பெருமாளை,—ஸதா- எப்பொழுதும்,—பஜே-ஸேவிக்கிறேன்.

என்றும் அநுஸந்தித்து;—

ஆசார்யா ணமஸா வஸாவித்யா பகவத்தஃ (Grantha)

ஆசார்யா ணமஸா வஸாவித்யா பகவத்தஃ

என்கிறபடியே தனக்கு ஆசார்யனாலே ஸ்வரூபலாப மாகை யாலே அவன்செய்த உபகாரங்களையுஞ் சிந்தித்து;—

ஆசார்யவாந் புருஷோ வேத (Grantha)

ஆசார்யவாந் புருஷோ வேத

ஸசாசார்ய வംஶோ ஜ்ஞேயஃ (Grantha)

ஸசாசார்ய வംஶோ ஜ்ஞேயஃ

என்கிறபடி (19) - ஆசார்யன் தனியனையும், அவ் வம்ஸபரம்பரையில் மணவாளமாமுனிகள் பர்யந்தமுள்ள தனியன்களையும், (20) மணவாளமாமுனிகள் பெரியபெருமாள் வரையிலுமுள்ள தனியன்களையும் ஸேவித்தல் வேண்டும்.

---

5. காலக்ஷேபஞ் செய்தல்.

ஸ்ரீபகவத் விஷயாதி அஷ்டாதஸரஹஸ்யம் முதலிய வ்யாக்யாந க்ரந்த காலக்ஷேபங்களைக் காலோசிதமாய்ச்செய்து தண்டன் ஸமர்ப்பித்து, தீர்த்தவடியைச் சேர்த்து தீர்த்தம் ஸ்வீகரித்து, திருமண் பெட்டியைச் சேர்த்து எழுந்தருளச் செய்ய வேண்டியது.

திருவாராதநக்ரமம்.

6. திருக்காப்பு நீக்குதல்.

திவ்யதேஸத் தெம்பெருமானுடைய சித்ரஸ்வரூபமாகிய படம், அல்லது விக்ரஹம், திருவடி, அபயஹஸ்தம், ஆசார்யன் திருவடி நிலை, இவைகளைத் தன் க்ருஹத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, நித்ய கர்மாநுஷ்டாநா நந்தரம் - பாதப்ரக்ஷாலந பூர்வகமாக ஆசமநம் பண்ணி, பகவத் ஸந்நிதிமுன்பே சென்று - தெண்டன் ஸமர்ப்பித்து (21 - கௌஸல்யா) என்னும் ஶ்லோகத்தையும், (ஸ்ரீஸைலேஸ) தனியன் தொடங்கி (ப்ரணதோஸ்மிநித்யம்) வரையிலும். திருப்பள்ளி யெழுச்சியையும், (22 - அங்கண்மா ஞாலத்தையும்) ஸேவித்தபின்பு, (23 - நாயகனாய் நின்ற) பாசுரத்தால் மூன்றுதரம் கையைத்தட்டித் திருக்காப்பு நீக்கவும்.

திருவாலவட்டம் ஸமர்ப்பித்து, திருப்பள்ளிசோதித்து, (24-மாரிமலை) என்கிற பாசுரத்தால் எம்பெருமானுக்கு ரத்நஸிம்ஹாஸந மென்று திருத்துழாய் ஸமர்ப்பித்து; ஸ்ரீயஃபதியை அதிலெழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து, அப்படியே அவர் பத்

தெட்டடியிட்டு எழுந்தருளினதாகப் பாவித்து அங்கடையழகுக்கு (25 - அன்றிவ்வுலகம்) என்கிற பாசுரத்தால் மங்கலாஶாஸநஞ்செய்து, (26 - ராமாநுஜாங்க்ரி) என்கிற ஶ்லோகத்தை யநுஸந்தித்து நின்று பெருமாள் ஸந்நிதியில் தெண்டன் ஸமர்ப்பித்து வாக்ய குருபரம்பரை, திருமந்த்ரம், த்வயம், சரமஸ்லோகம் இவைகளையும் 27 - த்யாந ஶ்லோகத்தையும் அநுஸந்திக்கவும்.

7. வட்டில்களில் தீர்த்தஞ் சேர்த்தல்.

பெருமாளுக்கு வலது பக்கத்தில் இருந்து ஸ்வாசார்யனால் நியமிக்கப்பட்டவனாய் (நதர்ம நிஷ்டோ ஸ்மி நசாத்மவேதீ நபக்திமாംஸ் த்வச்சரணாரவிந்தே, அகிஞ்சநோ உநந்ய கதிஶ்ஶரண்யத்வத் பாதமூலം ஶரணம் ப்ரபத்யே) என்றநுஸந்தித்து பின்பு ஸந்நிதி பாத்ரங்களைச் சோதித்துப் பரிசுத்தமாய்க் கொண்டு வந்திருப்பதைப் பெருமாள் சந்நிதியில் ஓராஸநம் அல்லது மணையின்மீது அடியிற் கண்டிருக்கிறபடி திருக்காவேரியென்னும் தீர்த்தச்செம்பையும் படிமத்தையும், ஒரு ரேத்ரவேதிகையில் - அர்க்ய, பாத்ய, ஆசமநீய, ஸ்நாநங்களுக்காகவலது புறத்திலிருந்து ப்ரதக்ஷிணமாகநான்குபக்கத்து நாலுவட்டில்களையும், நடுவே சுத்தோதக வட்டிலையும், எதிர்ப்புறத்தில் வேறே இரண்டு வட்டில்களையும் அமர்த்தி வட்டில்களுக்கு * சோஷணதாஹநப்லாவநங்கள் செய்ய வேண்டும்.

செம்பு தீர்த்தத்தில் திருத்துழாய் ஏலக்காய்ப்பொடி சாத்துப்படி இவைகளைச் சேர்த்து. § சுரபிமுத்ரையால் தொட்டுச் செம்பை வலக்கையினால் மூடிக்கொண்டு, ஐந்துதரம். (28 உத்தர வாக்யத்தால்) அபிமந்திரிக்கவும்.

---

* சோஷணதாஹந ப்ரலாவநங்கள் என்பது - வட்டில்களை வாயுவினால் உலர்த்தி, அக்நியினால் தஹிப்பித்து, ஜலத்தினால் சுத்திசெய்த பாவமாக அதற்குரிய - ஸ்ரீமதேநாராயணாயநம: என்னும் மந்த்ரத்தை உச்சரித்துக் கைகளால் பரிசித்தல்.

§ சுரபிமுத்ரை என்றால் - இரண்டு ஹஸ்தங்களையும் மடக்கி, நடுவிரலையும், ஆள்காட்டிவிரலையும் சேர்த்து, சுண்டுவிரலையும் பவித்ரவிரலையும் சேர்க்க, இப்படி இரண்டுவிரல்கள் சேர்ந்து ஒருமுலையாய் பசுவினிட நான்கு முலைபோலக் காட்டும் முத்ரை.

1. அர்க்யம்-ஸ்ரீஹஸ்தம் விளக்குகிறது.
2. பாத்யம்-திருவடிகள் விளக்குகிறது.
3. ஆசமநீயம்-ஸ்வீகரிக்கிறது.
4. ஸ்நாநம்-திருமஞ்ஜநங் செய்கிறது.
5. சுத்தோதகம்-பரிசுத்த தீர்த்தம்.



6. ஆசார்யனுக்கு-அர்க்யபாத்யாசம ஸ்நானோதக வட்டில்.
7. சுத்தோதக வட்டில்.
8. திருக்காவேரி என்னும் தீர்த்தச்செம்பு
9. படிகம்.



செம்பிலிருக்கும் தீர்த்தத்தாலும் திருத்துழாயாலும் உத்தர' வாக்யத்தைக்கொண்டு அபிமந்த்ரித்த உத்தரணியில் ஷை தீர்த்தங்கொண்டு ஷை வாக்யத்தால் ஐந்து வட்டில்களையும் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு, அந்தச் செம்பிலிருக்குந் தீர்த்தத்தை அர்க்ய வட்டில் தொடங்கி ப்ரதக்ஷிணமாக நாலுவட்டில் களிலும் நடுவட்டிலிலும் பூரித்து * திருத்துழாயும் ஏலக்காய்ப் பொடியும் சாத்துப்படியுஞ் சேர்த்து, ஐந்து வட்டில்களையும் ஒவ்வொன்றாக சுரபி முத்ரைகாட்டி, வலது கையினால்மூடி உத்தரவாக்யத்தால் ஐந்துதரம் அபிமந்த்ரிக்கவும்.

திருத்துழாய் தளத்தைப் பவித்ர விரலுக்கும் நடுவிரலுக்கும் மத்தியிலிடுக்கிக்கொண்டு, மத்யமட்டில் தொடங்கி மூன்று வட்டில்களிலும் நடுவட்டிலிலும் கொஞ்சங் கொஞ்சமாக உத்தரணியால் தீர்த்தமெடுத்து அர்க்யவட்டிலிற்சேர்த்து, அர்க்யவட்டிலி லிருந்து உத்தரணியில் தீர்த்தமெடுத்து திருத்துழாயுடனே கையினால் மூடிக்கொண்டு முகத்துக்கு நேராகத்தூக்கி ஸ்ரீவிரஜை, திருக்காவேரி, ஸ்வாமி புஷ்கரணி, அநந்தசரசு, திருத்தாம்பிரபர்ணி, திருக்கல்யாணி முதலான நூற்றெட்டுத் திவ்யதேச தீர்த்தங்களெ' ன்று பாவித்து உத்தரவாக்கியத்தால் ஐந்துதரம் அபிமந்திரித்து அர்க்யவட்டில் தவிர மற்றை நாலு வட்டில்களிலும் செம்பிலும் கொஞ்சம் கொஞ்சமாய்ச்சேர்த்து சேஷத்தைத் திருத்துழாயாலே பெருமாள் முதலியவர்கள், ஆசாரியன், சந்நிதி பரிகரங்கள் இவர்கள்மீதும் தன்மீதும் புரோக்ஷித்து மிகுந்த தீர்த்தத்தைப் படிகத்திற் சேர்த்து விடவும்.

---

* திருக்காவேரி என்னுஞ் செம்பாவது அல்லது ஆழ்வாராசார்யர்கள் திருவாராதநத்திற்கு ப்ரத்யேக வட்டில்களாவ தில்லாதிருந்தால், செம்பு தீர்த்தத்தை வட்டில்களில் பூரிக்கும்போதெல்லாம் உடனே அந்த வட்டில்களிலிருந்து உத்தரணியால் கொஞ்சந் தீர்த்தமெடுத்து செம்பில் சேர்த்துவிட்டால் அந்தத் தீர்த்தம் சேஷப்படாமல் உபயோகப்படும்,

8. ஆசார்யனுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்தல்.

செம்பிலிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியாலெடுத்து உத்தரவாக்கியத்தால் வேறே இருக்கிற இரண்டு வட்டில்களைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு, மேற்படி செம்பு தீர்த்தத்தை அவ்விரண்டு வட்டில்களிலும் பூரித்து, திருத்துழாயைச் சேர்த்து சுரபி முத்திரைகாட்டி, ஒவ்வொரு வட்டிலையும் வலது கையினால் மூடிக்கொண்டு ஐந்துதரம் உத்தரவாக்கியத்தால் அபிமந்திரித்து, ஒருவட்டிலில் உத்தரணியால் தீர்த்தமெடுத்து "அஸ்மத்குருப்யோநம:" "அர்க்யங்கண்டருளவேணும்" என்று அநுசந்தித்துக்கொண்டே ஆசார்யன் திருமுன்புகாட்டிப் படிகத்தில் சேர்த்துவிட்டு, இரண்டாந்தரமும் மூன்றாந்தரமு மப்படியே அவ்வட்டில் தீர்த்தத்தையே உத்தரணியாலெடுத்து ஆசார்யன் திருமுன்புகாட்டிப் படிகத்திற் சேர்த்துவிட்டு வேறே வட்டிலி லிருக்கும் சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு அந்த அர்க்யவட்டிலில்தானே உத்தரணியால் தீர்த்தமெடுத்து "அஸ்மத்குருப்யோநம:" "பாத்யங் கண்டருளவேணும்" என்று முன்போலவே மும்மூன்றுதரம் ஆசார்யன் திருவடிகளுக்குக்காட்டிப் படிகத்தில் சேர்த்துவிட்டு மறுபடியும் அவ்வட்டிலிற்றானே உத்தரணியால் தீர்த்தமெடுத்து ஆசாரியன் திருக்கைகளை விளக்கிய அர்க்ய பாத்திரத்தினின்றும் மூன்றுதரம் * கண்டூஷம் சமர்ப்பித்து உத்தரணியைச் சுத்தோகத்தினால் சோதித்து மறுபடியும் அவ்வட்டிலில்தானே தீர்த்தமெடுத்து "அஸ்மத்குருப்யோநம:" ஆசமநீயங் கண்டருளவேணும்" என்று மும்மூன்றுதரம் ஆசார்யன் திருக்கைகள் வழியாய் அருப்பவளத்துக்குக் காட்டிப் படிகத்திற் சேர்த்துவிட்டு சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு, "அஸ்மத்குருப்யோநம:" என்று திருத்துழாய் அல்லது தள்வத்தினால் திரு ஒற்றாடை சமர்ப்பிக்கவும்.

ஸ்நாநாசநத்தி லெழுந்தருளச்செய்ய "அஸ்மத்குருப்யோநம" என்று திருத்துழாய் சமர்ப்பித்து, அர்க்ய பாத்ய ஆசமநீ

---

* கண்டுஷம் - வாய்க்கொப்பளித்தல்.

யம் திரு ஒற்ருடை சமர்ப்பித்து ஒரு திருத்துழாயாலே திருநா வழித்து அர்க்யபாத்திரத்தினின்று மூன்றுதரம் அர்க்யம் சமர்ப்பித்து பாத்திய ஆசமநீயம் சமர்ப்பிக்கவும். சுருளமுது கண்டருளப்பண்ணி (29—வெண்ணெயளைந்த) என்னும் பாசுரந்தொடங்கி பத்துப்பாசுரங்களையாவது அல்லது ஆதியந்த பாசுரங்களையாவது சேவித்து, அந்த அர்க்யவட்லிலிருக்கும் தீர்த்தத்தைத்தானே உத்தரணியாலெடுத்து "அஸ்மத்குருப்யோநம:" "நீராட்டங்கொண்டருளவேணும்" என்று திருத்துழாய் தளத்தைக்கொண்டு ஆசார்யனுக்குப் புரோக்ஷித்துத்திருமஞ்சனமும் திரு ஒற்ருடையும் சமர்ப்பிக்கவும்.

அலங்காராசனத்திலெழுந்தருளச்செய்ய "அஸ்மத்குருப்யோநம:" என்று திருத்துழாய் சமர்ப்பித்துத் திருப்பரியட்டமாகப் பாவித்து "அஸ்மத்குருப்யோநம" என்று திருத்துழாயும், (30—வகையால்) என்கிற பாசுரத்தால் "அஸ்மத்குருப்யோநம:" என்று தூபமும், * அர்க்கியபாத்யாசமநீயமும், பிறகு திருஒற்ருடையும், (31—கேசவன்றமர்) என்கிற பத்துப்பாசுரங்களால் அல்லது கேசவாதிநாமங்களால் திருமண் காப்பாகத் திருத்துழாயும் (32—பூசுஞ்சாந்து) என்கிற பாசுரத்தால் சாத்துப்படியும் புஷ்பமும் திருவாபரணமுமாகத் திருத்துழாயும், (33—ஃமரிவதிலீசன்) என்கிற பாசுரத்தால் தூபமும், (34—வையந்தகளியா) என்கிற பாசுரத்தால் தீபமும், (பல்லாண்டு) என்கிற பாசுரத்தால் கற்பூரமும், பிறகு அர்க்ய பாத்யாசமநீயமும்,

---

* அர்க்யபாத்யாசமநீயம், திருஒற்ருடை, திருமண்காப்பு, சாத்துப்படி, புஷ்பம், திருவாபரணம், தூபம், தீபம், கற்பூரம் முதலியவை ஸமர்ப்பிக்கும்போதெல்லாம் அதற்குரிய பாசுரங்களோடேகூட "அஸ்மத் குருப்யோநம:" என்று ஸ்வாசார்யனுக்கும், "பராங்குசபரகால யதிவராதிப்யோநம:" என்று ஆழ்வாராசார்யர்களுக்கும்; "ஸர்வமங்கலவிக்ரஹாய ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதேநாராயணாயநம:" என்று பெருமாள், பிராட்டியார், அநந்தகருட விஷ்வக்ஸேஸேநதர்ஸந பாஞ்சஜந்யம் முதலானோர்களுக்கும், முதலிற் காட்டியபடியே அந்தந்த பாசுரங்களோடேகூட அவரவர்களுக்குரிய வாக்கியங்களை யநுஸந்தித்து அவரவர்களுக்கு உசிதமானபடி திருவாராதநம்ஸமர்ப்பிக்கவேண்டும்.

திருவொற்றுடையும், (35—சென்றாற்குடையாம்) என்கிற பாசுரத்தால் மந்திர புஷ்பமாகத் திருத்துழாயும் சமர்ப்பிக்கவும்,

9. ஆழ்வாராசார்களுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்தல்.

ஆசார்யன் ஸ்ரீஹஸ்தத்தால் திருவாராதநம் சமர்ப்பிக்கிறதாகப் பாவித்து, ஸ்வாசார்யனுக்கு சமர்ப்பித்த இரண்டுவட்டில்களிலுள்ள தீர்த்தத்தைப் படிகத்திற் சேர்த்துவிட்டு செம்பிலிருக்கும் தீர்த்தத்தினாலேயே முன்போல் வட்டில்களைச் சோதித்து தீர்த்தம் பூரித்து, ஸ்வாசார்யனுக்கு சமர்ப்பித்தபடியே "அஸ்மத்குருப்யோநம:" என்னும் வாக்கியத்திற்குப் பதிலாக மாத்திரம் "பராங்குசபரகால யதிவராதிப்யோநம:" என்று அநுசந்தித்து ஆழ்வாராசார்யர்களுக்குத் திருவாராதநம் சமர்ப்பிக்கவேண்டும்.

10. பெருமாள், பிராட்டியார், அநந்தகருட விஷ்வக்ஸேந ஸூதர்ஸநபாஞ்ச ஜந்யம் முதலானோர்களுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பித்தல்.

ஆசார்யன் ஸ்ரீஹஸ்தத்தால் திருவாராதநம் சமர்ப்பிக்கிறதாகப் பாவித்து, ஐந்து வட்டில்களுள் அர்க்யவட்டிலி லிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியிற்கொண்டு "சர்வமங்கல விக்ரஹாய, சமஸ்தபரிவாராய, ஸ்ரீமதேநாராயணாயநம:" என்று மூன்றுதரம் அர்க்யம் சமர்ப்பித்து, நடுவட்டிலிலிருக்கும் சுத்தோதகத்தினால் உத்தரணியைச் சோதித்துப் படிகத்திற் சேர்த்துவிட்டு மறுபடியும் அர்க்யபாத்திரத்தில் தீர்த்தமெடுத்துத் திருத்துழாய்கொண்டு எம்பெருமான் திருக்கைகளை விளக்கி அந்தப் பாத்திரத்தினின்றுமே மூன்றுதரம் கண்டூஷம் சமர்ப்பி

த்து உத்தரணியைச் சுத்தோதகத்தால் சோதித்து ஆசமநீய வட்டிலிலிருக்கும் தீர்த்தத்திஞல் மூன்றுதரம் ஆசமநீயம் சமர்ப்பித்து, சுத்தோதகத்திஞல் உத்தரணியைச் சோதித்துப் படிகத்தில் சேர்த்துவிட்டு திருஒற்ருடை சமர்ப்பிக்கவும். பிறகு ஸ்நாநாசநத்தி லெழுந்தருளச்செய்து அர்க்யபாத்ய ஆசமநீயம் திருவொற்ருடை சமர்ப்பித்து ஒருதிருத்துழாயாலே திருமுத்து விளக்கி யருளப்பண்ணி மற்ருெரு திருத்துழாயாலே திருநாவழித்து அர்க்யபாத்திரத்தினின்றும் மூன்றுதரம் அர்க்யம் சமர்ப்பித்துப் பாத்ய ஆசமநீயம் சமர்ப்பிக்கவும். சுருளமுதுகண்டருளப்பண்ணி ஸ்நான பாத்திரத்தினின்று (வெண்ணெயளைந்தகுணுங்காலே) திருமஞ்சனமும் பிறகு திருஒற்ருடையும் சமர்ப்பித்து, அலங்காராசநத்தி லெழுந்தருளச்செய்து, முன்போலவே திருப்பரியட்டமும், தூபமும், அர்க்யபாத்யாசமநீயமும், திருஒற்ருடையும், திருமண்காப்பு, சாத்துப்படி, புஷ்பம், திருவாபரணம், தூபம், கற்பூரம், மந்திரபுஷ்பம் முதலியவையும் சமர்ப்பித்து எம்பெருமானே சகல அபசாரங்களையும் பொறுத்தருளி சமஸ்தோபசாரங்களையும் திருவுள்ளம்பற்றியருள வேண்டுமென்று திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.

11. திவ்யப்ரபந்தம் ஸேவித்தல்.

(36 - குருமுக) என்னும் தனியனைத்தொடங்கி, திருப்பல்லாண்டு, கண்ணிநுண்சிறுத்தாம்பு, இராமாநுச நூற்றந்தாதிகளை ஸேவிக்கவும்.

12. ப்ரஸாதங்கண்டருளப் பண்ணுதல்.

போஜ்யாசநத்தி லெழுந்தருளச்செய்ய "சர்வமங்கல விக்ரஹாய, சமஸ்தபரிவாராய, ஸ்ரீமதே நாராயணுயநம:" என்றுதிருத்துழாய் சமர்ப்பித்து, ஐந்துவட்டில்களிலிருக்கும் தீர்த்தத்தை

க்கொண்டு ஷை வாக்கியங்களினல் அர்க்கியபாத்யாசமநீயமும், திருஒற்றுடையும் சமர்ப்பிந்து, அர்க்யவட்டிலிலிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியினு லெடுத்து திருத்துழாய் தளத்தைக்கொண்டு உத்தரவாக்கியத்தால்புரோக்ஷித்து ஸ்தலசுத்திசெய்யவும்.

தளிகை சமர்ப்பித்து, அர்க்யவட்டிலிலிருந்து உத்தரணியால் தீர்த்தத்தை யெடுத்து உத்தரவாக்கியத்தால் திருத்துழாய் தளத்தைக்கொண்டு ஷை தளிகை முதலியவற்றிற்குப் புரோக்ஷித்து திருத்துழாயையுஞ் சேர்த்து, சுரபி முத்திரைகாட்டி, பிரசாதத்தின்பேரில் வாமஹஸ்தசஹிதமாக வலதுகையை வைத்துக்கொண்டு உத்தரவாக்கியத்தால் அபிமந்திரித்து எம்பெருமான்கள் திருக்கைகளை தீர்த்தத்தினல் விளக்கி உத்தரணியால் தீர்த்தத்தை யெடுத்து உத்தரவாக்கியம் அநுசந்தித்து இரண்டு தரம் பிரதக்ஷணமாக தளிகையைச்சுற்றி, (37-நாறு நறும் பொழில்) (38-இன்று வந்தித்தனே) (39-கூடாரை) என்கிற பாசுரங்கள் சேவிக்கிற பரியந்தம் உத்தரணியுடனே கைகாட்டிக் கொண்டிருக்கவும். பாசுரங்களை சேவித்ததும் "சர்வமங்கல விக்ரஹாய, சமஸ்தபரிவாராய, ஸ்ரீமதே நாராயணுயநம:" என்று பெருமாள் முதலானவர்களுக்குப் பிரசாதமுந் தீர்த்தமுங்கண்டருள்வித்து, அர்க்யபாத்யாசமநீயமும், திரு ஒற்றுடையும் சமர்ப்பிக்கவும்.

பின்பு "பராங்குசபரகால யதிவராதிப்யோ நம:" என்று போஜ்யாசநத்தி லெழுந்தருள்வித்து, ஷை ஐந்து வட்டில்களிலுள்ள தீர்த்தத்தினலேயே அர்க்யபாத்யாசமநீயம் சமர்ப்பித்து ஷை பாசுரங்களைச் சேவித்து "பராங்குச பரகால யதிவராதிப்யோநம:" என்று நம்மாழ்வார் முதலிய பூர்வாசார்யர்களுக்கு அந்தப் பிரசாதமும் கண்டருள்வித்து அர்க்ய பாத்யாசமநீயமுந் திருஒற்றுடையும் சமர்ப்பிக்கவும்.

"அஸ்மத்குருப்யோநம:" என்று போஜ்யாசநத்தி லெழுந்தருள்வித்து, ஷை ஐந்துவட்டில்களிலுள்ள தீர்த்தத்தினலேயே அர்க்கிய பாத்யாசமநீயம் சமர்ப்பித்து, மேற்படி பாசுரங்களை சேவித்து "அஸ்மத்குருப்யோநம:" என்று ஸ்வாசார்யனுக்கு

தப் பிரசாதமுந் தீர்த்தமுங் கண்டருள்வித்து அர்க்யபாத்யாச மநீயமும் திருஒற்றுடையும் சமர்ப்பித்து தளிகையை மாற்றி விட்டு, "ஸ்ரீமதேநாராயணாயநம:" என்று ஸ்தலசுத்திசெய்யவும்.

13. அடைக்காயமுது செய்வித்தல்.

பர்யங்காசநத்தி லெழுந்தருளச்செய்ய "சர்வமங்கல விக்ர ஹாய, சமஸ்தபரிவாராய, ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று திருத்துழாய் சமர்ப்பித்துச் செம்பிலிருக்குந் தீர்த்தத்தை உத் தரணியாலெடுத்து மேற்படி வாக்கியங்களை யநுசந்தித்து அர் க்ய பாத்யாசமநீயமும் திரு ஒற்றுடையும் சமர்ப்பித்து, மேற் படி செம்பிலிருக்கும் தீர்த்தத்தை உத்தரணியாலெடுத்து, உத் தரக்கியத்தால் திருத்துழாய் தளத்தைக்கொண்டு அடைக்காய் க்குப் புரோக்ஷித்து திருத்துழாயுஞ்சேர்த்து, (40—பேய்ப்பாடு டைய) என்கிற பாசுரத்தையும் மேற்படி வாக்யங்களையும் அநு சந்தித்துப் பெருமாள் முதலானவர்களுக்கு அடைக்காயமுது செய்வித்து அர்க்யபாத்யாசமநீயமும் திருஒற்றுடையும் சமர்ப் பித்து, "பராங்குசபரகால யதிவராதிப்யோநம:" என்று பர்யங் காசநத்தி லெழுந்தருள்வித்து நம்மாள்வார் முதலிய பூர்வாசார் யர்களுக்குச் செம்பிலிருக்குந் தீர்த்தத்தினால் அர்க்யபாத்யாச மநீயமும் திரு ஒற்றுடையும் சமர்ப்பித்து, "அஸ்மத்குருப்யோ நம:" என்று பர்யங்காசநத்தி லெழுந்தருள்வித்து ஸ்வாசார்ய னுக்கு அந்தச் செம்பிலிருக்குந் தீர்த்தத்தினாலேயே அர்க்யபா த்யாசமநீயமும் திரு ஒற்றுடையும் சமர்ப்பித்து, அடைக்காய முது செய்வித்துப்பின் அர்க்யபாத்யாசமநீயமும் திரு ஒற்று டையும் சமர்ப்பித்து திருப்பல்லாண்டினால் கற்பூரம் சமர்ப் பிக்கவும்.

14. சாத்து.

சிற்றம், வங்கம், (41 - இருப்பிடம், 42 - இன்புற்ற, 43 - அங்கயல், 44 - பூமன்னு) என்கிற பாசுரங்களை சேவித்துக்கொ ண்டே திருத்துழாயும் திருப்பல்லாண்டினால் கற்பூரமும் சமர்ப்

பித்து, (45 – சர்வதேச) முதலிய வாக்கியங்களையும் வாழித் திருநாமங்களையும் அஞ்சலிஹஸ்தனாய் நின்று அநுசந்திக்கவும்.

15. திருக்காப்புச் சேர்த்தல்.

(46 - பந்நகாதீசே) த்யாதி அநுசந்தித்து திருத்துழாய் சமர்ப்பித்துச் சய்யாசநத்திலெழுந்தருளவென்று உத்தரவாக்கியத்தால் திருத்துழாய் சமர்ப்பித்து திருக்காப்புச்சேர்த்து, (17 - உபசாராபதேசேந) என்னும் சுலோகத்தை யநுசந்தித்து தண்டன் சமர்ப்பிக்கவும்.

16. ப்ரஸாதம் ஸ்வீகரித்தல்.

படிகத்திருக்கிற தீர்த்தமும் திருத்துழாயும் உத்தரவாக்யத்தால் ஸ்வீகரித்துப், பின்பு எம்பெருமான் முதலானவர்களுக்குக் கண்டருளப்பண்ணின சேஷத்தை "அஸ்மத்குருப்யோநம:" என்று ஆசார்யன் தனியனை யநுசந்தித்து ஸ்வீகரிக்கவேண்டும்.

17. காலக்ஷேபஞ் செய்தல்.

பகவத்விஷய அஷ்டாதசரஹஸ்யாதிவ்யாக்யாந காலக்ஷேபஞ்செய்யவும்.

18. இராத்திரியில் ப்ரஸாதங் கண்டருளப்பண்ணுதல்.

இராத்திரியில் தௌதமாய்க் கையைத்தட்டிப் பெருமாள் சந்நிதி திருக்காப்புநீக்கிச் செம்பிலிருக்கும் புதிய தீர்த்தத்தினால் ஐந்து வட்டில்களையும் உத்தரணியைக்கொண்டு சோதித்து படிகத்திற் சேர்த்துவிட்டு, வட்டில்களில் தீர்த்தம்பூரித்து, சுரபி முத்திரைகாட்டி, உத்தரவாக்யத்தால் அபிமந்திரித்து, "சர்வ மங்கலவிக்ரகாய, சமஸ்தபரிவாராய, ஸ்ரீமதேநாராயணாயநம:" என்று பெருமாள் முதலானவர்களுக்கு அர்க்யபாத்யாசமநீயமும் திருஒற்றாடையும் சமர்ப்பிக்கவும்.

ஸ்ரீசைலேசதனியன் தொடங்கி, திருப்பல்லாண்டு, (48— ஆநிரை, 49—இந்திரன், 50—சென்னி, 51—அமலனாதி, கண்ணிநுண் சிறுத்தாம்பு, 52—எழையேதலன், 53—ஆழியெழச்சங்

கும்) இசைகளைச்சேவித்து, "ஸர்வமங்கலவிக்ரஹாய, ஸமஸ்த பரிவாராய, ஸ்ரீமதே நாராயணாயநம:" என்று அர்க்யபாத்யாசமநீயமும் திருஒற்றாடையும் ஸமர்ப்பித்து உத்தரணி தீர்த்தத்தினால் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு உத்தரதாக்கியத்தினால் புரோக்ஷித்து ஸ்தலசுத்தி செய்யவும்.

தளிகை ஸமர்ப்பித்து, அர்க்யவட்டிலிலிருந்து உத்தரணியால் தீர்த்தத்தை யெடுத்து உத்தரவாக்கியத்தால் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு ஷை தளிகைக்குப் புரோக்ஷித்து, சுரபி முத்திரை காட்டித் திருத்துழாயைத் தளிகை முதலானவற்றுக்குச் சேர்த்துப் ப்ரஸாதத்தின்பேரில் கையை வைத்துக்கொண்டு உத்தரவாக்கியத்தால் அபிமந்திரித்து, உத்தரணியால் தீர்த்தத்தை இரண்டுதரம் பிரதக்ஷிணமாக உத்தரவாக்கிய மநுஸந்தித்துத் தளிகையைச்சுற்றி, (நாறுநறும்பொழில், இன்று வந்தித்தனை, (கூடாரை) என்னும் பாசுரங்களாலும், "ஸர்வமங்கள விக்ரஹாய, ஸமஸ்த பரிவாராய, ஸ்ரீமதே நாராயணாய நம:" என்னும் வாக்கியங்களாலும் பெருமாள் முதலானவர்களுக்குப் பிரஸாதமும் தீர்த்தமும் கண்டருள்வித்து ஷை வாக்கியங்களினால் அர்க்யபாத்யாசமநீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பிக்கவும்.

ஷை ஐந்து வட்டில்களிலுள்ள தீர்த்தத்தினால் "பராங்குச பரகால யதிவாராதிப்யோ நம:" என்று அர்க்யபாத்யர்சமநீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பித்து, "நாறுநறும்பொழில்" முதலிய பாசுரங்களுடன் இவ்வாக்கியத்தை மறுபடியு மநுஸந்தித்து நம்மாழ்வார் முதலான பூர்வாசார்யர்களுக்கு அந்த ப்ரஸாதமும் தீர்த்தமுங்கண் டருள்வித்து, மீளவும் ஷை வாக்யத்தினாலேயே அர்க்யபாத்யாசமநீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பிக்கவும்.

ஷை ஐந்து வட்டில்களிலிருக்குந் தீர்த்தத்தினால் "அஸ்மத் குருப்யோ நம:" என்று அர்க்யபாத்யாசநீயமும், திருஒற்றாடையும் ஸமர்ப்பித்து (நாறுநறும்பொழில்) முதலிய பாசுரங்களுடன் இவ்வாக்யத்தை மறுபடியுமநுஸந்தித்து ஸ்வாசார்யனுக்கு அந்த ப்ரஸாதமும் தீர்த்தமுங்கண்டருள்வித்து, மறுபடியும் இவ்வாக்கியத்தினாலேயே அர்க்யபாத்யாசமநீயமும் திரு ஒற்றாடையும் ஸமர்ப்பிக்கவும். தளிகையை மாற்றிக்கொண்டு "ஸ்ரீமதே நாராயணாயமநம: என்று ஸ்தலசுத்தி செய்யவும்.

செம்பிலிருக்குந் தீர்த்தத்தினல் "ஸர்வமங்கல விக்ரஹாய, ஸமஸ்த பரிவாராய, ஸ்ரீமதே நாராயணாயநம:" என்று அர்க்ய பாத்யாசமநீயமும் திரு ஒற்றடையும் ஸமர்ப்பித்துச் செம்பிலிருக்குந் தீர்த்தத்தை உத்தரணியினலெடுத்து உத்தரவாக்கியத்தினல் திருத்துழாய்த் தளத்தைக்கொண்டு அடைக்கரய்க்குப் புரோக்ஷித்துத் திருத்துழாயைச் சேர்த்து, "போய்ப்பாடுடைய" என்கிற பாசுரத்தையும் ஷை வாக்கியங்களையு மநுஸந்தித்துக் கொண்டு பெருமாள் முதலானவர்களுக்கு அடைக்காயமுது செய்வித்து ஷை வாக்கியங்களினல் அர்க்யாதியும் திருவொற்றடையும் ஸமர்ப்பிக்கவும்.

"பராங்குசபாரகால யதிவராதிப்யோநம:" என்று நம்மாழ்வார் முதலான பூர்வாசார்யர்களுக்கும் "அஸ்மத்குருப்யோநம:" என்று ஸ்வாசார்யனுக்கும் அர்க்யபாத்யாசமநீயங்கள் ஸமர்ப்பித்து, "போய்ப்பாடுடைய" என்னும் பாசுரத்துடன் ஷை வாக்கியங்களையு மநுஸந்தித்து அவ்வடைக்காயை யமுது செய்வித்து மீண்டும் ஷை வாக்கியங்களினல் அர்க்யாதியும் திருஒற்றடையும், திருப்பல்லாண்டினல் கற்பூரமும் ஸமர்ப்பித்து, "ஸர்வதேச" முதலிய வாக்கியங்களும் வாழித்திருநாமங்களும் ஸேவித்துத் திருக்காப்புச் சேர்த்துவிடவும்.

ததநந்தரம் தச்சேஷ ப்ரஸாதத்தை ஸ்வீகரித்து சயநிக்கும் போது வாக்கிய குருபரம்பரை த்வயம் இவற்றை அநுஸந்தித்துக் கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருநாராயணபுரம் முதலான நூற்றெட்டுத் திவ்யதேச எம்பெருமான்களையும் ஆழ்வாராசார்யர் முதல் தன்னசார்யன் பர்யந்தமுள்ளவர்களையும் பாவநாப்பிரகர்ஷத்தாலே ஸேவித்து, (54 - நாகணைமிசை) என்னும் பாசுரத்தையும் (55 - ராமாநுஜாங்க்ரி) என்னும் ஸ்லோகத்தையும் அநுஸந்தித்துக் கொண்டே சயநித்து மறுபடி விழித்துக்கொள்கையில் முன் சொன்னபடி குருபரம்பரையையும் த்வயத்தையும் அநுஸந்திக்கவும்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாராதநக்ரமம்.

முற்றிற்று.

முகுந்தமாலைக்குத்தனியன்.

குஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா தினே தினே ।
தமஹம் ஶிரஸா வந்தே ராஜாநம் குலஶேகரம் ॥

குஷ்யதே யஸ்ய நகரே ரங்க யாத்ரா திநேதிநே
தமஹம் ஶிரஸா வந்தே ராஜாநங் குலஶேகரம்.

தீர்த்தப் பிரபாவவிஷயமான ஸ்லோகம்.

திஸ்ர: கோட்யோ(அ)ர்த்தகோடீ ச தீர்த்தாநி புவநத்ரயே ।
வைஷ்ணவாங்க்ரிஜலாத் புண்யாத் கோடிபாகேந நோபமம் ॥

திஸ்ர: கோட்யோர்த்த கோடீச தீர்த்தாநி புவநத்ரயே
வைஷ்ணவாங்க்ரிஜலாத் புண்யாத் கோடி பாகேந நோபமம்.

எம்பெருமானர் விஷயமான ஸ்லோகம்.

[illegible] விததாம் விவிதாம் விஹ்ருதிம் திஷ்டாம் ஜய ராமாநுஜ ரம்ஜயாமி நித்யம் ॥

ஜயிநாம் விஜேதாம் ஸ்வகீயஸூக்தி: [illegible] । [illegible] விவக்ஷ்வ தத்வம் ஜய ராமாநுஜ ரம்ஜயாமி நித்யம் ॥

ஶ்ருதிஷு ஸ்ம்ருதிஷு ப்ரமாண தத்வம் க்ருபயா(அ)(அ)லோக்ய விஶோத்யைவ பாஷ்யம் । [illegible] ஜய ராமாநுஜ ரம்ஜயாமி நித்யம் ॥

ஜய மாயிமதாந்தகார பாநோ ஜய பாஹ்ய ப்ரவாதி [illegible] க்ருஶாநோ । ஜய ஸம்ஶ்ரித ஸிந்து ஶீதபாநோ ஜய ராமாநுஜ ரம்ஜயாமி நித்யம் ॥

ராமாநுஜ [illegible] ஶ்லோகம் ய: படேந்நியதம் நர: ।
ப்ராப்நுயாத் பரமாம் பக்திம் யதிராஜபதாப்ஜயோ: ॥

1. அகிலம்பஜதாமநந்யபாஜாஞ் சரணம்போருஹமாதரேணபும்ஸாம்
விதரந்விவிதாம்விபூதிமிஷ்டாஞ் ஜயராமாநுஜரங்கதாம்நிநித்யம்.

2. ஜயிநாந்விமதாம்ஸ்த்வதீயஸூக்தி: கலுஷீபூயகுத்ருஷ்டியிஸ்ஸமேதாந்
ஸகலீகுருதேவிபக்ஷவ்ருத்தாஞ் ஜயராமாநுஜரங்கதாம்நிநித்யம்.

3. ஶ்ருதிஷு ஸ்ம்ருதிஷு ப்ரமாணதத்வங்க்ருபயாலோக்யவிஶுத்
தயைவபுத்த்யா, அகரோர்ஹிததைகபாஷ்யரத்நஞ் ஜீயராமாநுஜரங்கதாம்
[நிநித்யம்.

4. ஜயமாயிமதாந்தகாரபாநோ ஜயபாஹ்யப்ரமுகாடவீக்ருஶாநோ
ஜயஸம்ஶ்ரிதஸிந்த்துஶீதபாநோ ஜய ராமாநுஜரங்கதாம்நிநித்யம்.

5. ராமாநுஜசதுஶ்ஶ்லோகீம் ய:படேந்நியதந்நர:
ப்ராப்நுயாத்பரமாம்பக்திம் யதிராஜபதாப்ஜயோ:.

வாக்ய குருபரம்பரை.

𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	அஸ்மத்குருப்யோநம:
𑌅𑌸𑍍𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	அஸ்மத்பரமகுருப்யோநம:
𑌅𑌸𑍍𑌮𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	அஸ்மத்ஸர்வகுருப்யோநம:
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃	ஸ்ரீமதேராமாநுஜாயநம:
𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌦𑌾𑌸𑌾𑌯 𑌨𑌮𑌃	ஸ்ரீபராங்குஶதாஸாயநம:
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌮𑌃	ஸ்ரீமத்யாமுநமுநயேநம:
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃	ஸ்ரீராமமிஸ்ராயநம:
𑌶𑍍𑌰𑍀𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷𑌾𑌯 𑌨𑌮𑌃	ஸ்ரீபுண்டரீகாக்ஷாயநம:
𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌮𑌃	ஸ்ரீமந்நாதமுநயேநம:
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑌠𑌕𑍋𑌪𑌾𑌯 𑌨𑌮𑌃	ஸ்ரீமதேஶடகோபாயநம:
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃	ஸ்ரீமதேவிஷ்வக்ஸேநாயநம:
𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃	ஸ்ரீயைநம:
𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃	ஸ்ரீதராயநம:

கூரத்தாழ்வானருளிச்செய்த
வாக்ய குருபரம்பரை ஶ்லோகம்.

𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑌸𑍍𑌮𑌦𑍀𑌯𑌪𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑌶𑍇𑌷𑌾𑌨𑍍 𑌗𑍁𑌰𑍂𑌨𑍍
𑌶𑍍𑌰𑍀𑌮𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌯𑍋𑌗𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌮𑌹𑌾𑌪𑍂𑌰𑍍𑌣𑍌 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑍍 ॥

𑌰𑌾𑌮𑌂 𑌪𑌦𑍍𑌮𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑌂 𑌨𑌾𑌥𑌂 𑌶𑌠𑌦𑍍𑌵𑍇𑌷𑌿𑌣𑌂
𑌸𑍇𑌨𑍇𑌶𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑌿𑌰𑌾𑌸𑌹𑌚𑌰𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

அஸ்மத்தேஶிகமஸ்மதீயபரமாசார்யாநஶேஷாந்குரூந்
ஸ்ரீமல்லக்ஷ்மணயோகிபுங்கவமஹாபூரணௌமுநிம்யாமுநம்,
ராமம்பத்மவிலோசநம்முநிவரந்நாதம்ஶடத்வேஷிணம்
ஸேநேஶம்ஶ்ரியமிந்திராஸஹசரந்நாராயணம்ஸம்ஶ்ரயே.

திருமந்த்ரம்.

𑍐 𑌨𑌮𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯.

ஓம் நமோ நாராயணாய.

த்வயம்.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

ஸ்ரீமந்நாராயணசரணௌஶரணம்ப்ரபத்யே,
ஸ்ரீமதேநாராயணாயநமஃ.

சரமஶ்லோகம்.

𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜 ।
𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾 𑌶𑍁𑌚𑌃 ॥

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம்ஶரணவ்ரஜ,
அஹம்த்வாஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமிமாஶுசஃ.

ஆசார்யதனியன்.

ஆசார்யன் தனியனையும் ஆசார்ய வம்ஶபரம்பரைத் தனியன்களையும் அநுஸந்திக்கவேண்டியது.

மணவாள மாமுநிகள்முதல் பெரிய பெருமாள்வரையில்.

---

1. மணவாளமாமுநிகள்.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥

ஸ்ரீஸைலேதயாபத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணஂவந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

2. திருவாய்மொழிப்பிள்ளை.

𑌨𑌮𑌃𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑌨𑌾𑌥𑌾𑌯𑌕𑍁𑌨𑍍𑌤𑍀𑌨𑌗𑌰𑌜𑌨𑍍𑌮𑌨𑍇 ।
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌲𑌬𑍍𑌧𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌕𑍈𑌙𑍍𑌕𑌰𑍍𑌯𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 ॥

நமஸ்ஸ்ரீஸைலநாதாய குந்தீநகரஜந்மநே,
ப்ரஸாதலப்தபரமப்ராப்ய கைங்கர்யஸாலிநே.

3. பிள்ளை லோகாசார்யர்.

𑌲𑍋𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌗𑍁𑌰𑌵𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌾𑌦𑌸𑍍𑌯 𑌸𑍂𑌨𑌵𑍇 ।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌭𑍋𑌗𑌿𑌸𑌨𑍍𑌦𑌷𑍍𑌟𑌜𑍀𑌵𑌜𑍀𑌵𑌾𑌤𑌵𑍇 𑌨𑌮𑌃

லோகாசார்யாயகுருவே க்ருஷ்ணபாதஸ்யஸூநவே,
ஸஂஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவேநமஃ.

4. வடக்குத்திருவீதிப்பிள்ளை.

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌾𑌦𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑍇 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌸𑌦𑌾 ।
𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌭𑍂𑌨𑍍𑌮𑌮 ॥

ஸ்ரீக்ருஷ்ணபாதபாதப்ஜே நமாமிஸ்ரிரஸாஸதா,
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம.

5. நம்பிள்ளை.

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌵𑌾𑌰𑌿𑌰𑌾𑌶𑍇𑌃 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌰𑌾𑌮𑍃𑌤𑌪𑍂𑌰𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌮𑍍 । 𑌆𑌦𑌾𑌯 𑌵𑌰𑍍𑌷𑌨𑍍𑌤𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌕𑌲𑌿𑌵𑍈𑌰𑌿𑌦𑌾𑌸𑌮𑍍 ॥

வேதாந்தவேத்யாம்ருதவாரிராஸேஃ
வேதார்த்தஸாரம்ருதபூரமக்ர்யம்.
ஆதாயவர்ஷந்தமஹம்ப்ரபத்யே
காருண்யபூர்ணங்கலிவைரிதாஸம்.

6. நஞ்சீயர்.

𑌨𑌮𑍋 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌯 𑌜𑌗𑌨𑍍𑌮𑌙𑍍𑌗𑌲𑌹𑍇𑌤𑌵𑍇 ।
𑌯𑌸𑍍𑌯 𑌵𑌾𑌗𑌮𑍃𑌤𑌾𑌸𑌾𑌰𑌭𑍂𑌰𑌿𑌤𑌂 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥

நமோவேதாந்தவேத்யாய ஜகந்மங்கலஹேதவே,
யஸ்யவாகம்ருதாஸார பூரிதம்புவநத்ரயம்.

7. பட்டர்.

ஶ்ரீபராஶரபட்டார்ய꞉ ஶ்ரீரங்கேஶபுரோஹித꞉,
ஶ்ரீவத்ஸாங்கஸுத꞉ஶ்ரீமாந் ஶ்ரேயஸேமேஸ்து பூயஸே.

8. எம்பார்.

ராமாநுஜாதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ,
ததாயத்தஸ்வரூபாஸா ஜீயாந்மத்விஶ்ரமஸ்த்தலீ.

9. எம்பெருமானார்.

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணித்ருணாயமேநே,
அஸ்மத்குரோர்பகவதோஸ்யதயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம்ப்ரபத்யே.

10. பெரியநம்பி.

கமலாபதிகல்யாணகுணாம்ருதநிஷேவயா,
பூர்ணகாமாயஸததம்பூர்ணாயமஹதேநம꞉.

11. ஸ்ரீ ஆளவந்தார்.

யத்பதாம்போருஹத்யாநவித்வஸ்தாஶேஷகல்மஷ꞉
வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயந்நமாமிதம்.

12. மணக்கால்நம்பி.

[illegible]
[illegible]

அயத்நதோயாமுநமாத்மதாஸமலர்க்கப த்ரார்ப்பணநிஷ்ரக்யேண,
யஃக்ரீதவாநாஸ்த்திதயௌவராஜ்யந்நமாமிதம்ராமமமேயஸத்த்வம்.

13. உய்யக்கொண்டார்.

[illegible]
[illegible]

நமஃபங்கஜநேத்ராய நாதஸ்ரீபாதபங்கஜே,
ந்யஸ்தஸர்வபராயாஸ்மத் குலநாதாய தீமதே.

14. ஸ்ரீமந்நாதமுநிகள்.

[illegible]
[illegible]

நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்யராஸயே
நாதாயமுநயேகாத பகவத்பக்திஸிந்தவே.

15. நம்மாழ்வார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்,
ஆத்யஸ்யநஃகுலபதேர்வகுலாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகலம்ப்ரணமாமிமூர்த்நா.

16. சேனைமுதலியார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீரங்கசந்த்ரமஸமிந்திரயாவிஹர்தும்
விந்யஸ்யவிஶ்வசிதசிந்நயநாதிகாரம்,
யோநிர்வஹத்யநிஶமங்குலிமுத்ரயைவ
ஸேநாந்யமந்யவிமுகாஸ்தமதிஶ்ரயாமஃ

17. பெரியபிராட்டியார்.

[illegible]
[illegible]

நமஶ்ஶ்ரீரங்கநாயக்யை யத்ப்ரூவிப்ரமபேததஃ,
ஈஶேஶிதவ்யவைஷம்ய நிம்நோந்நதமிதஞ்ஜகத்.

18. பெரியபெருமாள்.

[illegible]
[illegible]

ஸ்ரீஸ்தநாபரணந்தேஜஃ ஸ்ரீரங்கேஶயமாஶ்ரயே,
சிந்தாமணிமிவோத்பாந்தமுத்ஸங்கேநந்தபோகிநஃ.

ஸ்ரீராமாயணஶ்லோகம்.

[illegible]
[illegible]

கௌஸல்யாஸுப்ரஜாராமபூர்வாஸந்த்யாப்ரவர்த்ததே,
உத்திஷ்ட்ட நரசார்தூல கர்த்தவ்யந் தைவமாஹ்நிகம்.

கூரத்தாழ்வான் அருளிச்செய்த ஶ்லோகம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ராமாநுஜாங்க்ரிஶரணோஸ்மி குலப்ரதீப
ஸ்த்வாஸீத்ஸயாமுநமுநேஸ்ஸசதாவம்ஶ்யஃ
வம்ஶ்யஃபராங்குஶமுநேஸ்ஸச ஸோபிதேவ்யா
தாஸஸ்தவேதிவரதாஸ்மிதவேக்ஷணீயஃ.

த்யாநஶ்லோகம்.

[illegible]
[illegible]

[illegible]

கூர்மாதீந் திவ்யலோகாம்ஸ் ததநுமணியம்மண்டபந் தத்ரஶேஷந்
தஸ்மிந்தர்மாதிபீடந் தது பரிகமலஞ்சாமரக்ராஹிணீஶ்ச,
விஷ்ணுந்தேவீர்பூஷாயுதகணமுரகம் பாதுகேவைநதேயம்
ஸேநேஶந் த்வாரபாலாந் குமுதமுகணாந் விஷ்ணுபக்தாந் ப்ரபத்யே.

[illegible]

ஸவ்யம்பாதம்ப்ரஸார்யஶ்ரிததுரிதஹரந் தக்ஷிணங்குஞ்சயித்வா
ஜாநுந்யாதாயஸவ்யேதரமிதரபுஜந் நாகபோகேநிதாய,
பஶ்சாத்பாஹுத்வயேநப்ரதிபடஶமநேதாரயஞ்ஶங்கசக்ரே
தேவீபூஷாதிஜுஷ்டோஜநயது ஜகதாம் ஶர்மவைகுண்ட்டநாதஃ.

உத்தரவாக்யம்.

[illegible]

ஸ்ரீமதேநாராயணாயநமஃ

பிரமன்ஸாதித்த ஜிதந்தா ஶ்லோகம்.

[illegible]

உபசாராபதேஶேநக்ருதாநஹரஹர்மயா,
அபசாராநிமாந்ஸர்வாந்க்ஷமஸ்வபுருஷோத்தம.

சயனிக்கும்போது அநுஸந்திக்கும் ஶ்லோகம்.

[illegible]

ராமாநுஜம்ப்ரபந்நாயே ரக்ஷாம் வீக்ஷ்ய தயாநிதேஃ,
கரம் வக்ஷஸிநிக்ஷிப்ய நித்ராங் குர்வந்தி நிர்ப்பயாஃ.

நித்யாநுஷ்டாநவிதி.
முற்றிற்று.



ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ஸாலாக்ராம தத்வதீப

முக்தாவலி.

வாராய் ப்ரஹ்மாவே! ஸாலக்ராமத்தை யாத்ரயித்திருக்கிற என்னுடைய மாஹாத்ம்யத்தைச் சொல்லுகிறேன்கேள். சேதநர்கள் பொருட்டே நான் சிலாரூபத்தை வஹித்திருக்கிறேன். எல்லா தேவதைகளை யாராதிப்பதைப் பார்க்கிலும் ஸாலக்ராமத்தை யாராதிப்பதே விசேஷம். இந்த மூர்த்தியை பக்தியோடே எவன் ஆச்ரயிக்கிறானோ, அவனே பாகவதோத்தமன். மஹிமை பொருந்திய ஸாலக்ராம தீர்த்தமான எல்லாதீர்த்தங்களிலும் ச்ரேஷ்டம். அந்த மூர்த்தியில்லா கிருகம் ச்மசாநமாகும். என்னுடைய மூர்த்தியாகிய ஸாலக்ராமம் ஒருக்ஷேத்ரம் யாதொரு கிருகத்தி லிருக்கின்றதோ, அந்தக்கிருகமே வைகுண்டமாகும். அது என்க்ஷேத்ரமென்பதற்குச் சந்தேகமில்லை. ப்ரஹ்மாவே! கேள்; மஹா மூர்த்தியாகிய ஸாலக்ராமத்தை யெவன் க்ரயஞ்செய்து ஜீவிக்கிறானோ, அந்த பாபிஷ்டன் கோரமான நரகத்தை யடைவது ஸத்யமாம். என்னைக் கொள்ளுகைக்கும் கொடுக்கைக்கும் சிஷ்யாசார்யர்களே உரியவர்கள். ஸாலக்ராம மூர்த்தியைச் சிஷ்யாசார்ய ஸம்பந்த மின்றியே கொள்ளுமவனும் கொடுக்குமவ நரகத்தை யடைவார்கள். இந்த திவ்யாவதாரமான என்னை எவன் சிலையென்று புத்திபண்ணுகிறானோ, அவன் ப்ரஹ்மப்ரளய மளவாக ரௌரவநரகத்தை யடைவான். யாவனொருவன் ஸாலக்ராம மூர்த்தியைச் சந்தநம் ஸமர்ப்பியாமல் வேறு புண்ட்ரங்கொண் டலங்கிரிக்கிறானோ, அவன் மூர்க்கனென்று சொல்லப் படுவான். ஸாலக்ராமார்ச்சனையே புண்யம், எல்லா பாபங்களையும் நசிப்பிக்கும். இந்த ஸாலக்ராமமூர்த்தியே இஹபரலோகங்களைச் சாதித்துக் கொடுக்கும். ஸ்வயம் வ்யக்தமான ஸாலக்ராமமானது ஸம்ஸாரமாகிற ஸாகரத்தினின்றுங் கடத்தும். இம்மூர்த்தியி னவதாரத்தினாலேயே அர்ச்சைகளுக்குப் பூர்த்தியுண்டாயிருப்பது. ப்ரஹ்மாவே! எல்லா தபஸ்ஸுக்களிலும் ஸாலக்ராமாராதநமென்கிற தபஸ்ஸே பெரியது. ப்ராக்ருதமான ஸ்வர்ணரத்நாதி ஹாரங்களைக் காட்டிலும் ஸாலக்ராம மூர்த்திஹாரமே

எனக்கு மிகவும் ப்ரியமானது. அர்ச்சைக்கு ப்ராணஸ்தாநம் ஸாலக்ராமமே. ஸாலக்ராமமில்லாத ஆலயார்ச்சைகள் பூர்த்தி யற்றவை. ஸாலக்ராமத்தி னாராதனையாலும் ஸேவையாலும் ஸ்பர்சத்தாலும் தீர்த்தத்தாலும் ஸ்மரணத்தாலும் பாபங்களெல்லாம் விநாசமடையும். என்னுடைய பரத்வாதி பஞ்சகத்திலும் ஸாலக்ராமத்திற்கு ஸமமில்லை. எனது மூர்த்தியாகிய இந்த ஸாலக்ராமத்திற்கு ஸமமில்லை. எனது மூர்த்தியாகிய இந்த ஸாலக்ராமத்தின் மாஹாத்ம்யத்தை ஸநகாதிமுநிகளும் அறியமாட்டார்கள். நான் ஸர்வலோகங்களையும் வ்யாபித்திருந்தாலும் சேதந ஸம்ரக்ஷணார்த்தமாக ஸாலக்ராமத்தைத் திருமேனியாகக்கொண்டு அதினாலேயே ஸந்தோஷ மடைந்திருக்கிறே னென்பதற்குச் சந்தேகமேயில்லை. கங்கை முதலான தீர்த்தங்களிலும் தீர்த்த ராஜனாகிய இந்த ஸாலக்ராமதீர்த்தத்தோடு ஸத்ருசமான தீர்த்தம் த்ரிலோகத்திலும் துர்லபம். ஸர்வ பூதாந்தராத்மாவாயும் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாயும் ஸர்வசக்தியுக்தனாயு மிருக்கிற என்னாலும் ஸர்வசக்தியுக்தனாயு மிருக்கிற என்னாலும் ஸாலக்ராம மூர்த்தியின் மாஹாத்ம்யஞ் சொல்லமுடியாது. ஸாலக்ராம மூர்த்தியின் தீர்த்தம் பாபத்தை யெல்லாம் போக்கும். இந்த தீர்த்தமூலமாகவே சேதநர்களுக்கு புக்திமுக்திகளுண்டாகும். அர்ச்சாவதாரத்திற்கு ஆராதனை ஒருநாள் தவறினும் மறுநாளே அர்ச்சகன் ப்ராண ப்ரதிஷ்டை செய்யவேண்டும்; ஸாலக்ராமத்திற்கு அநேககாலம் ஆராதனையின்றி யிருந்தாலும் ப்ராண ப்ரதிஷ்ட்டை யொருக்காலும் செய்யத்தக்கதல்ல. என்னுடைய மூர்த்திகளாகிய மத்ஸ்ய கூர்மமூர்த்திகளில் சிலவற்றை தரித்திரங் கொடுக்குமென்கிற புத்தியால் விக்கியும் சிலவற்றை ஐச்வர்யங்கொடுக்கு மென்கிற புத்தியால் ஆதரித்தும் போருமவன் அஸத்தேயாவான். இந்த ஸாலக்ராமமூர்த்திகள் ஜலஜமாயும் க்ரிமிஜமாயும் ஸ்தலஜமாயு மிருந்துள்ள மூன்றில் ஸ்தலஜ க்ரிமிஜங்களிரண்டிலும் கௌண பாவஞ்செய்து ஜலஜமூர்த்தியை மாத்திரங் க்ரஹிக்குமவன் அதமனாவான். நான் சேதநர்கள் விச்வஸிக்கைக்காகவே ஸாலக்ராம சிலாரூபத்தைத் தரித்திருக்கிறேன். ப்ராக்ருதமான ஸ்வர்ண கோதாநங்களோடு ஸாலக்ராமதாநமும் ஸமமென்று புத்தி பண்ணி யெவன் தாநங்கொடுக்கிறானோ, அவன் நீசனென்று சொல்லப்படுவான். ஸாலக்ராம தீர்த்தப்ரோக்ஷணை யொன்றினாலேயே பிசாச ப்ரஹ்மரக்ஷஸ்ஸுக்களும் பறந்தோடும். ஸாலக்

ராம மூர்த்தியானது அநேகமாக பிந்நப்பட்டிருந்ததே யாயி னும் ஒவ்வொரு கண்டமும் மூர்த்தியை யிருந்தபடி யாராதியா மல் சில்பியைக்கொண்டு பிம்பரூபமாக்குமவன் சண்டாளனென்று கீர்த்திக்கப்படுவான். ஸர்வலோக சரண்யனுகிய நான் ஸாலக்ரா மமில்லாத ஆலயத்தில் ப்ரீதியோடு ஒருக்காலும் வர்த்திப்ப தில்லை. சோலையமைந்த பத்மவநத்திலும் துலஸீவநத்திலும் வைஷ்ணவக் குழவிலும் எனக்கு எவ்வளவு ப்ரீதியுண்டோ அவ் வளவு ப்ரீதி ஸாலக்ராம க்ஷேத்ரமிருக்கிற விடத்திலிருக்கும். நான் ஸர்வகாலமும் வர்த்திக்கிற ஸாலக்கிராமமென்னும் க்ஷேத்தி ரத்திற்கு ஸத்ருசமான ஸ்த்தலம் த்ரிலோகத்திலும் இல்லை. என் னுடைய மூர்த்தியாகிய ஸாலக்ராமத்தை டம்பார்த்தமாவது க்யா திலாபார்த்தமாவது, கொடுத்தவனுங் கொண்டவனும் நரகத் தை யடைவார்கள். அந்யதேவதைகளையும் என்னுடைய மூர்த் தியையும் எவன் ஸமமாக புத்திபண்ணுகிருனே, அவன் சண் டாள யோநியிற் பல ஜந்மங்கள் எடுப்பான். இந்த ஸாலக்ராம மூர்த்தியை ஐச்வர்யார்த்தமாக எவன் பூஜிக்கிருனே அவன் மூர்க்கனென்று சொல்லப்படுவான். எவன் அநந்யப்ரயோஜந னுய் ஸ்வஸ்வரூபத்தையும் உணர்ந்து ஸாலக்ராமத்தை யாரா திக்கிருனே, அவன் எனக்கெப்பொழுதும் ப்ரியனுவான். ஸாலக் ராமமூர்த்தியைக் கொடுத்தவன் பக்கல் ஆசார்ய விச்வாசம் எவ னுக்குண்டாகவில்லையோ, அந்த க்ரூரனுடைய வீட்டிவிருப்பு எனக்கு முள்மேலிருப்பாம். அர்ச்சாவதாரங்களெல்லா வற்றி லும் ஸாலக்ராமமே பாவநமானது. அந்த ஸாலக்ராமதாநத்துக்கு உபயவிபூதியும் நேராகாது. இந்த ஸாலக்ராமமூர்த்தியை வைகா நஸ விதியாலாவது பாஞ்சராத்ர விதியாலாவது த்ரவிடப்ரபந்த ஸூக்திகளாலாவது ஆராதிக்குமவர்களுடைய ஆதிக்யத்துக்கு முடிவில்லை.

ஓ ப்ரஹ்மாவே! கேள்; ஜகந்நாதனுயும் ஸாலக்ராம ரூபியுமா யிருக்கிற என்னுடைய அவதாரத்தைச் சேதநர்களுக்காக ஸர் வஸ்வதாநம் பண்ணுகிறேன். எப்படி கண்டகி யென்னும் பேரை யுடைய நதியில் ஸ்நாநஞ்செய்து தந்தமபீஷ்டங்களைப் பெறுகின் றூர்கள். ஸாலக்ராம க்ஷேத்ரவாஸத்துக்கு ஸமாந க்ஷேத்ரவாஸம் மூன்று லோகத்திலும் அதற்கு நிகர் மற்றென்றில்லை. வஸ்துவை முந்தாணியில் முடிந்து எப்படி ஆள்கின்றூர்களோ, அப்படியே

நானும் ஸாலக்ராமரூபத்தாலே ஆச்ரிதர்கள் முந்தாணியில் முடிந்தாளலாம்படி பவ்யனாயிராநின்றேன். ஸாலக்ராமமூர்த்தியைத் தநமூலமாயாவது கைங்கர்யமூலமாயாவது பக்திமூலமாயாவது லபித்து ஆராதிக்குமவர்களே யெனக்கு எப்போதும் ப்ரியர். ஸாலக்ராமரூபியான என்னை எவன் விக்ரயித்து ஜீவநம் பண்ணுகிறானோ, அவன் எனக்கு பக்தனாயிருந்தாலும் என்னுடைய நிக்ரஹத்துக்கே விஷயமாவான்.

இந்த ஸாலக்ராமரூபியான என்னை யெவன் பரீக்ஷைபண்ணுகிறானோ, அவன் மாத்ருயோநி பரீக்ஷை பண்ணினவனே யென்பதற்குச் சந்தேகமேயில்லை. என்னுடைய மூர்த்தியை யிருந்தபடியே யாராதியாமல் வதநாஸநங்களில்லையென்று எவன் நிரூபிக்கிறானோ, அவன் அதமாதமன். ஸாலக்ராமமூர்த்தியான என்னுடைய திருமேனியில் சந்தந புஷ்பங்கள் உலரும்படி யெவன் பார்க்கிறானோ, அந்தபாபி யென்னுடைய ஸௌகுமார்யமறியாதவன். ஸாலக்ராமம் எந்தக்ருஹத்திலிருக்கின்றதோ, அந்த கிருகத்தில் யமகிங்கரர்களும் பூதபிசாசங்களும் ப்ரவேசிக்கமாட்டா. ஸாலக்ராமம் எவ்விடத்தில் பிரதிஷ்டமாயிருக்கின்றதோ, அவ்விடத்தில் நோய்பஞ்சம் திருடுகள் நடையாடா. ப்ரஹ்மாவே! இங்ஙனம் ஸாலக்ராம வைபவத்திற் சிறிது சொன்னேன். இது முழுமையும் என்னாலும் எடுத்துரைக்க முடியா. ஆகையால் ஸாலக்ராம மூர்த்தியின் வைபவம் எல்லையில்லா திருக்குமென்றுணர்க.

ஸ்ரீ ஸாலக்ராம தத்த்வதீப முக்தாவலி

முற்றிற்று.

மனவாளமாமுனிகள்.